கோகுலம்

குழந்தைகள் பத்திரிகை
1-2-1976
60 காசு





சமையலுக்குப் பெருந்துணை
ஓய்வில்லாத தாய்மார்கள் சுவையான சமையல் செய்ய சுலபமான வழி! இந்த 3 பெருந்துணைகளைப் பின்பற்றி, பல்வேறு இன்பமூட்டும் தின்பண்டங்களைத் தயாரித்து மகிழுங்கள்!
பிரவுன் & போல்ஸன்
கார்ன்ஃப்ளவர்
சமோசா, பட்டீஸ் ஆகியவற்றை அதிமெல்லியதாகவும் மொரமொரப்பாகவும் ஆக்குகின்றது. குழைவான சுவைமிகு சூப், கிரேவி ஆகியவற்றைக் கெட்டியாகத் தயாரிக்க உதவுகிறது.
Brown & Polson Cornflour
பிரவுன் & போல்ஸன்
வெரய்டி கஸ்டர்டு பவுடர்
6 இனிமையான சுவை வகைகள்! குடும்பத்தினரை மகிழ்விக்க வீட்டிலேயே புட்டிங், பாயசம், ஜெல்லி ஆகிய பல்வேறு இன்சுவையுள்ள பண்டங்கள் தயாரிக்க சாலச் சிறந்தது.
Brown & Polson
ரெக்ஸ்
பேகிங் பவுடர்
கேக், பிஸ்கோத்து, பகோடா, பூரி, குலாப் ஜாமூன் ஆகியவற்றை சுவையுடன் அதி மென்மையாகத் தயாரிக்க உதவுகிறது. சிறிதளவே சிறப்பாகச் செய்து முடிக்கிறது!
REX BAKING POWDER
OBM 5457 TAM
பிரவுன் & போல்ஸன் மற்றும் ரெக்ஸ்
தரமுயர்ந்த தயாரிப்புகள். அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப்படுத்தப்பட்டவை—கிடைப்பனவற்றிலேயே சிறந்தவை.
கார்ன் பிராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரைவேட் லிட்.
ஸ்ரீநிவாஸ் ஹவுஸ்,
எச். ஸோமானி மார்க்,
பம்பாய் 400 001.

கோகுலம்

மலர் 4 ✻ இதழ் 22

பிப்ரவரி 1, 1976

ராட்சஸ, தை. 18

உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் - பாரதியார்

சந்தா விகிதம்

இந்தியா

ஒரு வருடம்	ரூ. 15.00
ஆறு மாதம்	ரூ. 7.50

வெளிநாடுகள்

ஒரு வருடம்	ரூ. 33.00
ஆறு மாதம்	ரூ. 16.50

உங்களுக்கு ஒரு விளையாட்டு


பெண் குழந்தைகளான உங்களுக்குக் கை நிதானமும், லாகவமும் அவசியம். கையில் நடுக்கம் கூடாது. செய்யும் காரியத்தில் அவசரம் ஆகாது. இப்போது நான் உங்களுக்கு ஒரு விளையாட்டைச் சொல்லித்தரப் போகிறேன். மேலே குறிப்பிட்டுள்ளவைகளில் நீங்கள் எவ்வளவு தேர்ச்சி யுள்ளவர்கள் என்பதை இது சொல்லிவிடும்.

பதினெட்டு அங்குல நீளமும் பன்னிரண்டு அங்குல அகலமுமுடைய ஒரு கெட்டி அட்டையை எடுத்துக் கொள்ளுங்கள். அதன் நான்கு பக்கத்திலும் ஓர் அங்குலத்துக்கு உள்ளடக்கி நடுவில் பல்வேறு உருவ அமைப்பில் சின்னதும் பெரியதுமாக நிறைய முக்கோணங்களை வரையுங்கள். (படம்) ஒரு முக்கோணத்துக்கும் மற்றதுக்கும் நல்ல இடைவெளி இருக்கட்டும். நல்ல பிளேடினால் முக்கோணங்களைக் கச்சிதமாக வெட்டி எடுத்துவிடுங்கள். இப்போது அட்டையில் ஏராளமான முக்கோண வடிவில் துளைகள் இருக்கும். இந்த அட்டையை நீளவாட்டில் அப்படியே உருட்டு பன்னிரண்டு அங்குலப் பக்கங்களைச் சேர்த்து 'ஸெல்லோ டேப்' கொண்டு ஒட்டி இணைத்துவிடுங்கள். பசையினால் ஒட்டியோ 'ஸ்டேப்ளரினால்' பின் செய்தோ கூட இதை உருவாக்கலாம். ஆனால் உருளையின் வெட்டு வாய்க் குறுக்களவு ஆறு அங்குலம் இருக்கும்படி அளவோடு இணையுங்கள். அட்டை இப்போது தூண்போல் துவாரங்களுள்ள உருளையாகிவிடும்.

குளிர் பானம் உறிஞ்சிக் குடிக்கப் பயன்படும் 'ஸ்ட்ரா' தெரியுமில்லையா? அதில் கொஞ்சம் தேவை. இரண்டு பேர் விளையாட 24 ஸ்ட்ராக்களும் ஆறு பேர் விளையாட வேண்டுமானால் 72 ஸ்ட்ராக்களும் வேண்டும். அதாவது ஒரு நபருக்குப் பன்னிரண்டு ஸ்ட்ரா. இந்தப் பன்னிரண்டு ஸ்ட்ராக்களை மூன்று அளவுகளில் வெட்டிக்கொள்ள வேண்டும். நான்கு ஸ்ட்ராக்களை $6\frac{3}{4}$ அங்குல நீளத்திலும், அடுத்த நான்கை $7\frac{1}{2}$ அங்குல நீளத்திலும் கடைசி நான்கு $8\frac{1}{4}$ அங்குலமும் இருக்கட்டும். இனி மேல்தான் விளையாட்டு. முக்கோணத் துவாரங்கள் உள்ள உருளையை மேஜை மீது நிற்க வையுங்கள். ஒவ்வொருவரும் தங்களிடமுள்ள ஸ்ட்ராக்களை உருளையின் பக்கங்களிலுள்ள துவாரத்தின் வழியாக உள்ளே நுழைத்து மறு பக்கத்தில் உள்ள துவாரத்தில் அதன் முனை படியும்படி நிற்கவைக்க வேண்டும். ஒரு தடவைக்கு ஒருவர் ஒரு ஸ்ட்ராவை இப்படித் துவாரத்தில் நுழைத்து நிறுத்த வேண்டும். இந்தச் செயலில் ஸ்ட்ரா கீழே விழுந்து விட்டாலோ, மற்றவரின் ஸ்ட்ராவைத் தொட்டுவிட்டாலோ நான்கு பாயிண்டுகள் போச்சு!

அது சரி, பாயிண்டுகளைக் கணக்கிடுவது எப்படி? $6\frac{3}{4}$ அங்குல ஸ்ட்ராவை நிற்க வைத்தால் ஆறு பாயிண்ட். $7\frac{1}{2}$ அங்குல ஸ்ட்ராவுக்கு மூன்று பாயிண்ட். நீளமான $8\frac{1}{4}$ அங்குல ஸ்ட்ராவுக்கு ஒரு பாயிண்ட். ஒவ்வொரு ஆட்டக்காரரும் தன்னிடமுள்ள 12 ஸ்ட்ராக்களையும் ஆட்டத்துக்கு ஒன்றாக நுழைத்தானதும் பாயிண்ட்களைக் கணக்கிட வேண்டும். அதிக பாயிண்ட்களை எடுத்தவரே வென்றவர் என்பதைச் சொல்லவா வேண்டும்?

எம். சாந்தா



அறநெறி

திருமுருக கிருபானந்த வாரியார்



யார் விலங்கு? யாருக்கும் விளங்கும்!

நெடிய கானகத்திலே ஒரு கொடிய வேடன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு நாள் வில்லம்புகளை ஏந்தி வேட்டைக்குப் புறப்பட்டான்.

பகல் முழுதும் வேட்டைக்காகக் காட்டில் திரிந்தான். விலங்குகள் கிடைக்கவில்லை. பட்டினியால் வாடினான். மாலை நேரம் பெருமழை கொட்டியது. குளிரால் நடுங்கினான். அவன் கையில் வில்லம்புகள் நழுவி விட்டன.

அப்போது ஒரு பெரிய வேங்கைப் புலி அவன் மீது பாய வந்தது. புலியினால் கிலியடைந்த அவன் தப்பும் வழியின்றி ஒரு வானளாவிய மரத்தின் மீது ஏறிக் கொண்டான். புலிக்கு மரம் ஏறத் தெரியாது. ''ஏ, வேடனே! எத்தனை காலமானாலும் நீ ஏறிய வழியில்தானே இறங்க வேண்டும்? உன்னை விட்டு நான் போக மாட்டேன்'' என்று சொல்லி மரத்தடியில் மண்டியிட்டு அமர்ந்து கொண்டது.

அந்த மரத்தின் மீது ஒரு கரடி இருந்தது. கரடியைக் கண்ட வேடன் நடுங்கினான். கரடி அவனைப் பார்த்து அன்புடன், ''அன்பனே! நீ அஞ்சாதே. நான் வசிக்கும் இடத்துக்கு நீ வந்திருக்கிறாய். தன்னிடம் வந்தவன் பகைவனேயானாலும் அவனைக் காப்பது தான் தருமம். நான் உன்னைக் கொல்ல மாட்டேன். நீ பயப்படாமல் இந்த இரவை என்னிடம் கழித்து விடிந்த பின் உன் இருப்பிடம் போகலாம்'' என்றது.

புலி, ''தம்பி, கரடியே! நீ செய்வது முறையன்று. இந்த வேடன் நம் விலங்கு இனத்துக்குப் பகைவன். நீ இவனுக்கு இடம் தராதே. இனமல்லாத இனத்துடன் கூட்டுச் சேரக் கூடாது. இது பிழை. இவன் உன்னையும் என்னையும் கொல்லும் கொடுமையாளன். இவனை விரட்டு'' என்றது.

கரடி, ''புலியண்ணா! உன் வார்த்தையில் உண்மை இருக்கிறது. இவன் கொடியவன்தான். ஒப்புக்கொள்ளுகின்றேன். இருப்பினும் என் வீடு தேடி வந்தவனை விரட்டக் கூடாது. இவன் என் அடைக்கலப் பொருள். இவனை நான் விரட்ட மாட்டேன்'' என்றது.

இரவு பன்னிரண்டு மணியாயிற்று. வேடன் தூக்கத்தினால் மயங்கினான்.

கரடி, ''வேடனே! நீ தூங்கி விழுகின்றனையே! கீழே விழுந்தால் புலி உன்னை அல்வாத் துண்டைப் போல் தின்று பசியாறும். ஆதலால் என் தொடை மீது தலை வைத்துப் படுத்துக்கொள்'' என்றது.

வேடன் கரடியின் தொடை மீது தலை வைத்துச் சாய்ந்து படுத்துக் கொண்டான். கரடி அவனைக் கையால் அணைத்துக் கொண்டது.

புலி, ''தம்பி! நீ செய்வது மோசம். இவனால் உனக்கு வரும் நாசம். இவன் மீது உனக்கு நேசம். இவன் நமது குலப் பகைவன். இவனைக் கீழே தள்ளிவிடு. எனக்குக் கடும் பசி. காது அடைக்கின்றது. இவனை உண்டு மகிழ்ந்து போவேன்'' என்றது.

கரடி, ''அண்ணே! அடைக்கலமாக வந்தவனை நான் தள்ள மாட்டேன். நம்பியவனைக் காப்பது என் கடமை'' என்றது.

சிறிது நேரம் பொறுத்து வேடன் தெளிவு பெற்று எழுந்தான். கரடிக்குத் தூக்கம் வந்தது. ''வேடனே! எனக்கு இப்போது உறக்கம் வருகிறது. உன் மடிமிசை தலை வைத்துச் சிறிது தூங்குவேன்'' என்று கூறி, அவன் தொடையில் தலை வைத்துப் படுத்துக்கொண்டு உறங்கி விட்டது.

இந்தக் காட்சியைப் புலி பார்த்தது.

''வேடனே! எனக்குப் பசியின் வேதனை மிகுந்துள்ளது. எனக்கு இப்போது உணவு தேவை. இந்தக் கரடி விடிந்த பின் உணவின் பொருட்டு உன்னைக் கொன்றாலும் கொல்லும். நான் உன்னைக் கொல்ல முயன்றேன். பசித்தவனுக்கு இட்டிலி கிடைத்தால் என்ன, தோசை கிடைத்தால் என்ன? பசியாற வேண்டியதுதானே முக்கியம்? நீ கரடியைத் தள்ளிவிடு. கரடியைத் தின்றுவிட்டுப் போவேன். நீ உன் இருப்பிடம் போகலாம். ஆதலால் உனக்கும் சுகம், எனக்கும் சுகம். கரடியைத் தள்ளு'' என்றது.

நன்றி கெட்ட வேடன் நல்லது என்று நம்பி, மடிமீது தலை வைத்துப் படுத்துக் கொண்டிருந்த கரடியைப் பிடித்துக் கீழே தள்ளி விட்டான்.

கீழே விழுகின்றபோது கரடி தாவி மற்றொரு கிளையைப் பிடித்துக்கொண்டு மேலே ஏறியது. கரடி தன்னை நோக்கி வருவதையும், தான் செய்த பிழையையும் எண்ணிப் பார்த்தான். 'கீழே தள்ளிய என்னைக் கரடி அடித்துக் கொன்றுவிடும். என் வாழ்வு முடிந்தது' என்றும் எண்ணி நிலை குலைந்தான்.

கரடி வேடனைப் பார்த்து, ''அன்பனே! நீ அஞ்ச வேண்டாம். நம்பிய என்னை நன்றியின்றிப் புலிக்கு உணவாகக் கீழே தள்ளினாய். ஆயின் என் இருப்பிடம் வந்து அடுத்த உன்னை நான் கடைசிவரை காப்பாற்றுவேன். நீ செய்த பிழையை நானும் செய்ய மாட்டேன். அதனால் நீ பயப்பட வேண்டாம்'' என்று ஆறுதல் கூறியது.

புலி நம்பிக்கை இழந்து போய்விட்டது. பொழுது விடிந்ததும் வேடன் தன் இருப்பிடத்துக்குப் போனான். இப்போது எண்ணிப் பாருங்கள் கரடி விலங்கா? வேடன் விலங்கா?



அந்தக் கன்னிகா மடத்தின் கதவு தட்டப்பட்டது.

ஒரு பெண் துறவி பரபரப்பின்றி மெதுவாக நடந்து வந்தாள், கதவைத் திறப்பதற்கு.

மாலை மறைந்து இருள் கவியத் தொடங்கிய நேரம் அப்போது. உடலைக் கடிக்கும் மாரிக் காலத்தின் குளிர் ஆரம்பமாகி விட்டது.

உணவும் உறைவிடமும் வேண்டி அம்மாதிரியான வேளைகளில் வழிப் போக்கர்கள் வருவது வழக்கம்தான். அவர்களுக்குப் புகலிடம் அளிப்பதும் சகஜம் தான்.

அன்று அந்தக் கன்னிகா மடத்தின் வாயில் படியில் நின்று கொண்டிருந்தது ஓர் இளம் பிச்சைக்காரி. கந்தலாடை, களைத்துப் பஞ்சடைந்த கண்கள், புழுதி படிந்த உடல். குளிரினால் அது நடுங்கிக் கொண்டிருந்தது.

மடாலயத்தின் கதவைத் திறந்த துறவி அடைக்கலம் வேண்டி நின்ற உருவத்தைக் கண்டதும், ''நீயா?'' என்றாள் வியப்பும் வெறுப்புமாக. உடனே படீரென்று அப்பெண்ணின் முகத்தில் மோதாத குறையாக, மடாலயத்தின் கதவை மூடிவிட்டு உள்ளே போய்விட்டாள்.

வேதனையும், களைப்பும் தவிப்புமாக அந்தப் பிச்சைக்காரி படி இறங்கி வீதியில் தள்ளாடி நடந்தாள். நடந்தாளா? இல்லை. நகர்ந்தாள். அடுத்து அருகிலிருந்த ஒரு சத்திரத்தின் கதவைப் போய்த் தட்டினாள். அங்கும் இதே நிலை! சத்திரத்து உரிமையாளன் உதவி வேண்டி வந்திருப்பவள் யார் என்பதை அறிந்து கொண்டதும் பரபரப்புடன் கதவை மூடித் தாளிட்டுக் கொண்டான். அன்று இரவு, ஏன் — அதன் பிறகு ஒவ்வோர் இரவுமே அந்த ஊரில் வாழும் எவருமே அந்தப்* பிச்சைக்காரியின் பசிக்கு உணவோ குளிருக்கு ஒதுங்க இடமோ அளிக்கவில்லை. யாரிடமெல்லாம் அவள் போய்க் கையேந்தி நின்றாளோ அவர்களுக்கெல்லாம் தெரியும்; அவள் வெறும் பிச்சைக்காரி அல்ல என்று. அவள் ஓர் இளவரசி என்பதை அறிவார்கள். அந்த ஊரிலிருந்து பார்த்தால் தூரத்தில் தெரியும் மலை மீது ஒரு கம்பீரமான கோட்டை தெரியும். அந்தக் கோட்டையில் வாழ்ந்தவள்தான் அந்தப் பிச்சைக்காரி.

அவள் எப்படிப் பிச்சைக்காரியானாள்? அந்த நகரத்தின் ஏழை எளியவர்களுக்கும் நோயாளிகளுக்கும், பஞ்சைப் — பனாதைகளுக்கும் தன் செல்வத்தையெல்லாம் வாரி வாரி வழங்கியதினால்தான் அவள் இப்படிப் பிச்சைக்காரியானாள். திக்கற்றவர்களுக்கு உணவும், உறைவிடமும் நல்கும் மடங்களைக் கட்டிக் கொடுத்தாள் இந்தப் பிச்சைக்காரி. இன்று இவள் முகத்துக்கு முன்னால் தங்கள் வீட்டுத் தலை வாசல்களை மூடித் தாளிட்டுக் கொள்கிறார்கள் அந்த ஊரார். எந்த மக்களை நேசித்து, அவர்கள் துன்பம் கண்டு துடித்துக் கண்கலங்கினாளோ அவர்களே இன்று அவளைக் கண்டு முகம் கடுத்தார்கள். அவளைப் பார்க்கவே பிடிக்காதவர்களைப் போல் வீட்டுக் கதவுகளை அடைத்துக் கொண்டார்கள்.

கடைசியில் ஒரு விடுதியின் வெளியே தன்னந்தனியாக இருந்த ஓர் அறையில் காலி மது ஜாடிகளுக்கிடையே உடலை முடக்கிக் கொண்டு தூங்கினாள் அந்தப் பிச்சைக்காரி.

இப்படிப் பிச்சைக்காரியான இவள் எந்த நாட்டுக்கு இளவரசி. எப்போது வாழ்ந்தாள் என்று கேட்கத் தோன்றுகிறது அல்லவா? ஐரோப்பாவில் உள்ள ஹங்கேரி என்ற நாட்டின் இளவரசி தான் இவள். பெயர் எலிஸபெத். பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவள். தந்தை இரண்டாம் ஆண்ட்ரூ. ஜெர்மனியைச் சேர்ந்த தூரிங்கியா (Thuringia) நாட்டின் இளவரசன் நான்காம் லூயியை மணந்து கொண்டாள் எலிஸபெத்.

வேண்டாம் இந்த அரண்மனை வாழ்வு


கௌசிகன்

சிறு வயதிலிருந்தே எலிஸபெத் ஏழை எளியவர்களிடம் இரக்கமும் பரிவும், பாசமும் காட்டுவாள். ஆரம்பத்தில் தன் இளம் மனைவி ஒடுக்கப்பட்ட சமூகத்திடம் ஒட்டுறவு கொண்டிருப்பது லூயிக்குப் பிடிக்கவில்லை. ஆனால் எலிஸபெத் தன் குணத்தை மாற்றிக் கொள்ளவில்லை. ஏராளமான செல்வத்தை ஏழைகளுக்கு வழங்கிக் கொண்டுதான் இருந்தாள்.

அப்போது ஐரோப்பாவில் இருந்த அத்தனை கிறிஸ்தவர்களும் 'குருஸேட்ஸ்' என்ற புனிதப் போரிலே ஈடுபட்டிருந்தார்கள். ஏசுபிரான் பிறந்த இடமான ஜெருசலேத்தை முகம்மதியர்களிடமிருந்து மீட்பதற்காக நிகழ்த்திய போராட்டங்களுக்கு 'குருஸேட்ஸ்' என்று பெயர். இப்படிப் புனிதப் போரில் ஈடுபட்ட மன்னர்களில் ஜெர்மனியின் சார்பாகச் சென்ற இளவரசர்களில் ஒருவன் லூயி — எலிஸபெத்தின் கணவன்.

இந்தப் புனிதப் போரினால் எத்தனையோ கொடுமைகளை, குரூரங்களை, ஐரோப்பா அனுபவித்தது. அவைகளில் ஒன்று போர்க்களத்திலிருந்து திரும்பும் வீரர்கள் தங்களோடு தோல்வி, துயரம், இழப்பு இவைகளை மட்டுமல்லாமல் தொழு நோயையும் கொண்டு வந்தார்கள். தங்கள் தங்கள் தாய் நாட்டில் உள்ளவர்களுக்கும் அதைத் தொற்றவும் செய்தார்கள். மத்திய ஐரோப்பாவிலும் துரிங்கியாவிலும் — தொழு நோய் ஏராளமாகப் பரவலாயிற்று.

டான்யூப் நதியை நோக்கியபடி அமைந்திருந்தது எலிஸபெத்தின் அரண்மனைக் கோட்டை. ஒரு நாள் எலிஸபெத் எங்கேயோ போய்விட்டு அரண்மனைக்குத் திரும்பிக் கொண்டிருந்தாள். ரஸ்தா ஓரத்திலே ஒரு தொழு நோயாளி செத்துக் கொண்டிருக்கும் நிலையில் அநாதரவாகக் கிடப்பதைக் கண்டாள். உடனே தன் கோச்சு வண்டியை நிறுத்தச் செய்தாள். அந்த நோயாளியைத் தன் வண்டியில் ஏற்றிக் கொண்டு அரண்மனைக்குக் கொண்டு வந்தாள். தன்



கணவனின் படுக்கையிலேயே அந்த நோயாளியைக் கிடத்தி அவனுக்குச் சிகிச்சை அளித்தாள்.

எலிஸபெத்தின் கணவன் லூயி சிலுவைப் போர்க்களத்திலிருந்து திரும்பினான். தன் படுக்கையில் உடல் மூடிப் படுத்திருக்கும் நோயாளியின் போர்வையை விலக்கினான். அங்கே அவன் கண்டது ஒரு நோயாளியின் முகத்தை அல்ல. அப்படியானால் ....? ஏகபிரானின் திருமுகத்தை.

மற்றொரு சமயம் ஏழை எளிய மக்களுக்கு வழங்குவதற்காக ரொட்டிகள் கொண்ட ஒரு மூட்டையை எலிஸபெத் எடுத்துப் போய்க் கொண்டிருந்தாள். அவள் செயல்களினால் சீற்றம் கொண்ட லூயி தன் மனைவியைத் தடுத்து நிறுத்தினான். ''கையிலே என்ன பெரிய மூட்டை? பிரி அதை'' என்று அதட்டினான். மௌனமாகத் தன் கையிலிருந்த மூட்டையைப் பிரித்துக் காட்டினாள் எலிஸபெத். அதிலே அவள் கணவன் கண்டது என்ன தெரியுமா? ரொட்டிகள் இல்லை. அப்படியானால்? செந்நிறமான ரோஜா மலர்களின் குவியலை!

எலிஸபெத்தின் கணவன் இதன் பிறகு தன் இளம் மனைவியிடமும் அவள் செயல்களிலும் பரிவு காட்டலானான். அவளது தொண்டு மனப்பான்மைக்குத் தானும் உதவி ஒத்துழைக்கவும் ஆரம்பித்தான்.

பஞ்சமும் நோயும் நாட்டைச் சீரழிக்கலாயின. லூயி மறுபடியும் சிலுவைப் போரிலே கலந்து கொள்ள அழைக்கப்பட்டான். தன் நாட்டுமக்கள் பசியாலும் பிணியாலும் விரட்டப்பட்டு கோட்டைக்கு முன் வந்து குவியும் காட்சியைக் காணத் துரிங்கியாவில் அதன் காவலனான மன்னன் லூயி இல்லை. ஆனால் அவன் மனைவி ராணி எலிஸபெத் இருந்தாள். கோட்டையின் படிகளிலே பஞ்சம், பசி, பிணியால் அவதியுறும் தம் மக்களை எதிர்கொண்டாள். தன் அரண்மனையிலிருந்த அத்தனை உணவுப் பொருள்களையும் அவர்களுக்கு வழங்கினாள். அரண்மனைச் சமையல்காரர்கள் இரவும் பகலும் எந்த நேரமும் ரொட்டி சுட்டுக் கொண்டே இருந்தார்கள். எல்லா நகரங்களிலும் கிராமங்களிலும் உணவு வழங்கும் கேந்திரங்களை நிறுவினாள். அங்கு வழங்குவதற்கு உணவுப் பொருள்கள் தீர்ந்தபோது அரண்மனையின் கஜானாவைத் திறந்து விட்டாள். ஏழைகளுக்கும், எளியவர்களுக்கும் அத்தனை செல்வத்தையும் பங்கிட்டுக் கொடுத்தாள்.?

கஜானாவின் சேமிப்புப் பூராவும் காலியான போதும் ஏழைகளின் பசி அடங்காததையும் பஞ்சம் அகலாததையும் கண்டாள். தன்னுடைய மணிமகுடம், ஆபரணங்கள், நகைகள், விலை மதிப்பற்ற நவரத்தினக் கற்கள் அரசாங்கத்துப் பொக்கிஷ மனைத்தையுமே மக்களின் பசியைத் தணிக்கும் உணவுப் பொருள்களை வாங்குவதற்கு விற்றாள்.

நாட்டில் தலைவிரித்தாடும் பஞ்சத்தை விரட்டி அடித்து வெற்றி கொள்ள எலிஸபெத் மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பற்றியெல்லாம் போர்க்களத்திலிருந்த அவள் கணவன் லூயிக்குச் செய்திகள் போயின. தாய் நாட்டின் அவல நிலையை ஒழுங்குபடுத்த ஓடோடி வந்தான் மன்னன் லூயி. அரசனை எதிர்கொள்ள ஓடினார்கள் அவையின் அதிகாரிகளும் பிரபுக்களும். ''அரண்மனையில் உள்ள அத்தனையையும் சூறையிட்டு விட்டாள் அரசி. உடனே நீங்கள் வந்து இந்தச் செயலைத் தடுத்து நிறுத்த வேண்டும். அதைச் சொல்லவே ஓடோடி வந்தோம்'' என்றனர். ஆனால் அவர்கள் எதிர் பார்த்தபடி லூயி ஆத்திரமடையவில்லை. எதிர் கொள்ள வந்தவர்கள் மீது எரிந்துவிழுந்தான்.

''ஏழை மக்களைக் காப்பாற்றுவது நமது கடமை. அவர்கள் பசியைப் போக்க வேண்டும். அநாதைகளுக்கு அன்னமளிப்பது ஆண்டவனுக்கு அளிப்பதற்குச் சமானம்'' என்றான். மனைவியுடன் தானும் நாட்டு மக்களின் பஞ்சம் பிணியைத் துடைக்கப் பாடுபட்டான் ஆனால் சில மாதங்களில் லூயிக்கு சிலுவைப் போர்க்களத்துக்குத் திரும்பி வருமாறு அழைப்பு வந்துவிட்டது.

அரசாங்க அதிகாரிகளும் பிரபுக்களும் தன் மனைவி எலிஸபெத்தை வெறுக்கிறார்கள் என்பதை உணர்ந்திருந்தான் மன்னன் லூயி. ஏழைகளிடம் இரக்கம் காட்டிப் பொருளை வாரி வழங்கும் அவளுக்குப் பொறாமை கொண்ட அவர்களால் தீங்கு நேரலாம் என்று எண்ணித் தன் தம்பி நான்காம் ஹென்றி ராஸ்பியின் பாதுகாப்பில் அவளை ஒப்படைத்துப் போர்க்களம் புறப்பட்டுப் போனான் லூயி. ஆனால் அந்த நல்ல எண்ணம் கொண்ட மன்னனைக் காலன் தன் விருந்தாளியாக அழைத்துக் கொண்டு விட்டான். போர்க்களத்திலே ஒருநாள் கடும்



அட்டையில் உள்ளவரைப் பற்றி!

காலையில் ராஜா முகத்தில் விழித்தால் அன்று பூரா 'லக்கி டே' தான். ராஜாவுக்குத் தினமும் கோவில் போகவேண்டும்; ஒரு பிரதட்சிணமும் செய்வான். அவனுக்கு லட்டு - Made in Tirupati என்றால் ரொம்ப பிடிக்கும்; மற்ற 'மேக்' எதையும் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டான். ரொம்ப ரொம்ப நல்லவன்... அட்டையிலுள்ள ராஜாவை இப்படியெல்லாம் தாஜா செய்து படம் எடுத்தவர்: உத்ராதான்.

ஜுரம் கண்டு கண் மூடிய லூயி பிறகு இந்த நன்றிகெட்ட உலகைப் பார்க்கக் கண்களைத் திறக்கவே இல்லை.

ராணி எலிஸபெத் ஏழை எளிய மக்களுக்குத் தொடர்ந்து உதவி செய்து வருவதைக் கண்டு மனம் கொதித்த லூயியின் விரோதிகள் ஓராண்டு வரை பொறுத்துக் கொண்டிருந்தார்கள். பிறகு ஹென்றியின் மனத்தை மாற்றித் தங்கள் விருப்பப்படிச் செயல்பட வைத்தார்கள். அவர்கள் சொற்படி லூயியின் மனைவியைத் - தன் அண்ணியை, ராணி எலிஸபெத்தை — அரண்மனையை விட்டே விரட்டினான் ஹென்றி. தெருவிலே பிச்சைக்காரியைப் போலத் திரியும்படிச் செய்தான். ஊர் மக்கள் யாருமே அவளுக்கு உதவக் கூடாது, ஒதுங்க இடமளிக்கக் கூடாது என்றும் ஆணையிட்டான்.

மடாலயங்களின் கதவுகளும், சத்திரங்களின் வாசல்களும், இல்லங்களில் வாழும் மக்களின் இதயங்களும் இழுத்து மூடப்பட்டன. பல நாட்கள் எலிஸபெத் தன் நாட்டின் தெருவிலே அநாதையாக அலைந்து கொண்டிருந்திருந்தாள். நன்றி மறக்காத சில ஊழியர்கள் ரகசியமாக அளித்த உணவு அவள் உயிரைக் காப்பாற்றிக் கொண்டு வந்தது. பாம்பர்க்கின் பிஷப்பான எக்பர்ட் என்பவர் எலிஸபெத்தின் மாமா. அவள் நிலையைக் கேள்விப்பட்ட அவர் அரசியாக இருந்தவள் வாழ ஓர் இல்லத்துக்கு ஏற்பாடு செய்து கொடுத்தார்.

சிலுவைப் போரிலே ஈடுபட்டிருந்தவர்கள் துரிங்கியாவுக்குத் திரும்பினார்கள். மன்னன் லூயியைப் பற்றி நன்கு அறிந்தவர்கள் அவர்கள். அவர் மனைவிக்கு நேர்ந்த கதியைக் கண்டு கொதித்தார்கள். கணவனை இழந்த அரசியை மறுபடியும் மரியாதைகளோடு அரண்மனையில் வாழ வைக்க வேண்டும் என்று ஹென்றியிடம் வற்புறுத்தி இணங்க வைத்தார்கள். அரசி எலிஸபெத் மறுபடி தன் அரண்மனைக்குத் திரும்பினாள். ஆனால் வெறுப்பை உமிழும் மைத்துனனைப் பார்த்துக் கொண்டு அரண்மனைக்குள் வாழ்வதை வெறுத்தாள் எலிஸபெத். ஒரு நாள் தன் மூன்று குழந்தைகளுடன் 'இனி என்றுமே இந்த அரண்மனைக்குத் திரும்பமாட்டேன்' என்று உறுதியோடு கானகத்தை நோக்கிக் கிளம்பி விட்டாள். அங்கு ஒரு எளிமையான குடிசையில் தன் குழந்தைகளுடன் வசித்து வந்தாள். அப்போது எலிஸபெத்துக்கு என்ன வயது தெரியுமா? இருபத்தி ஒன்றே வயதுதான். இத்தனை இள வயதில் எத்தனை இன்னல்கள், அனுபவங்கள்? அரச போகத்தையும் செல்வக் குவியல்களையும் மற்றவர்களின் சுகத்துக்காக வாரி வாரிக் கொடுத்த எலிஸபெத் துறவியாக முடிவுசெய்தாள். சிங்காதனத்துக்குள்ள உரிமையைத் தானே துறந்தாள்? குடும்பம், உலகம் எல்லாவற்றையும் உதறிவிட்டு யார் கண்ணிலும் பட விரும்பாமல் எதிலும் பற்றின்றித் தனிமையிலே வாழ்ந்தாள்— ஹங்கேரி நாட்டின் இளவரசியான எலிஸபெத். தன் எஞ்சிய நாட்களை நோயாளிகளுக்கும், தொழுநோய்க்காரர்களுக்கும் தொண்டு செய்யும் எளிமையான ஊழியனைப் போலவே கழித்தாள்.

இவ்வுலகை விட்டுப் பிரிந்த போது எலிஸபெத்துக்கு என்ன வயது என்று நினைக்கிறீர்கள்? இருபத்திநாலு. 1235ல் போப் ஒன்பதாவது கிரகோரி, ஹங்கேரியின் தேவதையாக *(Saint Elezabeth of Hungary)* எலிஸபெத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்தினார். தெய்வமாகவே போற்றப்படக்கூடிய தகுதி படைத்தவள் தானே அந்த மாதரசி?



எட்டுக் கேள்விகள் ?

அன்று பள்ளியில் பரீட்சை நடந்து கொண்டிருந்தது. கேள்வித் தாளில் மொத்தம் எட்டுக் கேள்விகள் கேட்கப் பட்டு இருந்தன. அவற்றில் ஏதேனும் நான்கு கேள்விகளுக்கு மட்டுமே விடை எழுதினால் போதும் என்று கேள்வித் தாளின் ஆரம்பத்தில் கூறப்பட்டிருந்தது. ஆனாலும் எட்டுக் கேள்விகளும் கடினமான கேள்விகள்தான். அதனால் கேள்வித் தாளைப் பார்த்ததும் அங்கிருந்த மாணவர்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவர்கள் எதிர்பார்த்த கேள்விகள் ஒன்றுகூட வரவில்லை. மாணவர்கள் திகைத்துக் கொண்டிருந்தனர்.

அவர்களில் மிகவும் கெட்டிக்கார மாணவன் ஒருவன் இருந்தான். அவனும் கேள்வித் தாளைப் பார்த்து விழித்துக்கொண்டிருந்தான். 'கேள்விகள் இவ்வளவு கடினமாக இருக்கின்றனவே, எப்படிப் பதில் எழுதுவது?' என்று எண்ணி அவன் விழிக்கவில்லை. எட்டுக் கேள்விகளில் நான்கு கேள்விகளுக்குத் தானே பதில் எழுதச் சொல்லியிருக்கிறார்கள். எந்த நான்கு கேள்விகளுக்கு விடை எழுதுவது என்று தெரியாமல் விழித்தான் அந்த மாணவன்!

சிறிது நேரம் யோசித்தான். பின் விறுவிறுவென்று எழுத ஆரம்பித்தான். குறிப்பிட்ட நேரத்துக்குள் கேள்வித் தாளில் உள்ள எட்டுக் கேள்விகளுக்குமே விடை எழுதிவிட்டு அடியில் ஒரு குறிப்பும் எழுதி வைத்தான்.

''ஐயா, பரீட்சை அதிகாரி அவர்களே! எட்டுக் கேள்விகளுக்குமே விடை எழுதி விட்டேன். ஏதேனும் நான்கு விடைகளுக்கு மட்டும் மார்க் போட்டால் போதும்'' என்று எழுதியிருந்தான்.

பரீட்சை அதிகாரி அவனது விடைகளைப் படித்துப் பார்த்தார். அவருக்கே திகைப்பாகி விட்டது. எந்த நான்கு விடைகளுக்கு மார்க் போடுவது என்று! ஏன் தெரியுமா? அந்த மாணவன் எழுதியிருந்த எட்டு விடைகளுமே மணி மணியாக இருந்தன.

இவ்வளவு கெட்டிக்காரனான அந்த மாணவன் பெரியவனானதும் ஒரு பெரிய வக்கீலாக விளங்கினான். மாதம் ரூபாய் நாலாயிரம், ஐயாயிரம் சம்பாதித்தான். ஆனாலும் வருமானத்தைப் பெரிதாகக் கருதவில்லை. வக்கீல் தொழிலை உதறித் தள்ளிவிட்டு தேச விடுதலைக்காகப் பாடுபட்டான். காந்திஜியின் முக்கிய சீடனாக விளங்கினான்.

அவர்தான் காலஞ்சென்ற நம் முன்னாள் ஜனாதிபதி பாபு இராஜேந்திர பிரசாத். — வழுந்தூர் எம். ஜே. இக்பால்

முட்டாள் யார் ?

ஒரு வியாபாரி தன்னுடைய மருமகனைப் பார்த்து, ''ஐவான்! இங்கே சீக்கிரமாக வா, உனக்கு ஓர் அருமையான சமாசாரத்தைச் சொல்லப் போகிறேன். சிறிது நேரத்துக்கு முன்பு ஒரு சரக்கை விற்றேன். என் வழியைப் பின்பற்றினால் நீயும் வெகு சீக்கிரத்தில் பணக்காரனாகி விடலாம். நம்முடைய இருப்பில் இருந்த போலந்துத் துணி உனக்குத் தெரியும் அல்லவா? அது பல வருஷங்களாக நம்மிடம் கட்டுக் கிடையாகக் கிடந்த துணி. அதைப் புத்தம் புதிய சரக்கு என்று சொல்லி அதிக விலைக்கு விற்று விட்டேன். சரியான ஒரு முட்டாள் வந்து அகப்பட்டான். தலையில் கட்டிவிட்டேன் இதோ பார்!'' என்று கற்றைக் கற்றையாக நோட்டைக் காண்பித்தான்.

வியாபாரி இவ்வாறு சொல்லி முடித்ததும் மருமகன் கூறியதாவது:


''மாமா! இப்போது யார் முட்டாள் என்பது சந்தேகமாக அல்லவா இருக்கிறது! நீங்கள் அவனிடம் துணியை விற்றுவிட்டு வாங்கிய இந்த நோட்டுகள் எல்லாம் 'கௌண்டர்ஃபீட்' — கள்ள நோட்டுக்கள். நன்றாகப் பாருங்கள்!''

— ரஷ்யக் குட்டிக்கதை—''கோகு''




மூளைக்கு வேலை

1. ஒரு சீட்டுக்கட்டின் நான்கு ஜாதியிலும் உள்ள ஐந்து இலக்கமிட்ட கார்டுகளை உருவி எடுங்கள். இந்தக் கார்டுகளை




ஒவ்வொரு ஜாதியிலும் நான்கு படக்குறிகள் மட்டுமே தெரியும்படி மேஜை மீது அமைக்க வேண்டும். முடியுமா உங்களால்?




2. இங்குள்ளது போன்ற கோலத்தைப் பென்சிலைத் தூக்காமலும் கோட்டின் மீது கோடு படாமலும் கடக்காமலும் இரு தடவை வரையாமலும் ஒரே கோட்டில் முடிக்க முடியுமா?

3. இந்த அமைப்பை நான்கு சமமான பாகங்களாகவும் ஒரே மாதிரியான




தோற்றமுடையதாகவும் பிரிக்க வேண்டும் முடியுமா?

4. ஒருவன் சைக்கிளில் ஒரே வேகத்தில் பிரயாணம் செய்கிறான். அவன் கடக்க வேண்டிய தூரத்தில் ஐந்தில் ஒரு பங்கைக் கடந்தபோது மணி 10-02. பாதி தூரத்தைக் கடந்ததும் மணியைப் பார்த்தான். கடிகாரம் 10-50 காட்டியது. தன் முடிவை அவன் அடையும் போது என்ன மணியாக இருக்கும்?




5. இங்கிலாந்தின் புகழ்பெற்ற 'பிக் பென்' கடிகாரத்தைப் போன்ற ஒரு பெரிய கடிகாரத்தின் முட்களைப் புதிதாக மாற்றியமைக்கத் திட்டமிட்டார்கள். பெரிய முள்ளின் எடை ஒரு டன்னும் சிறிய முள்ளின் எடை அரை டன்னும் இருக்கும்படி வார்க்க வேண்டும் என்று முடிவு கட்டினார்கள். அப்படியானால் அதற்குத் தேவையான உலோகம் எத்தனை டன்கள் வேண்டும்?

6. ஒரு ஜமீன்தாருக்கு ஐந்து பிள்ளைகள். சதுர வடிவில் விஸ்தாரமான நிலப்பரப்பில் பெரிய பங்களா (படத்தில் கருமையாகக் காட்டியுள்ள பகுதி) இருந்தது. தோட்டத்திலே பத்துப் பலா மரங்கள் இருந்தன. தேன்பலா ரொம்ப ருசி. ஜமீன்தார் தம் ஐந்து புதல்வர்களும் ஒற்றுமையாக ஒரே வீட்டில் வசிக்க வேண்டுமென்றும் மீதமுள்ள நிலங்களை ஒரே அமைப்புள்ள ஐந்து சமபாகங்களாகவும் ஒவ்வொரு பாகத்திலும் இரண்டு பலா மரங்கள் வரும்படியும் பிரித்துக் கொள்ள வேண்டுமென்றும் ஆணையிட்டார். பிள்ளைகள் குழம்பினார்கள். அவர்களுக்கு உதவ உங்களால் முடியுமா?




7. இந்த அமைப்பை இப்படியே ஒரு மெல்லிய அட்டையில் காப்பி செய்து கொள்ளுங்கள். பிறகு அவைகளைத் துண்டுகளாகக் கத்தரித்து, துண்டுகளை



மறுபக்கம் திருப்பாமல் அப்படி அப்படியே மாற்றி அமைப்பதன் மூலம் ஒரு சதுர வடிவமாக்க முடியுமா? முயன்று பாருங்களேன்.

8. அசோக் நகரில் தெற்கு வடக்காகப் போகும் வீதிகளுக்கு அவென்யூ என்று பெயர். கிழக்கு மேற்காகப் போகும் வீதிகளுக்குச் சாலைகள் என்று பெயர். வடக்குப் பக்கத்திலும் கிழக்குப் பக்கத்திலுமுள்ள வீடுகளின் எண்ணிக்கையெல்லாம் ஒற்றைப்படையாக இருக்கும். கிட்டு வசிப்பது 119 கோகுலம் சாலையில். அப்படியானால் அவன் வீடு எந்தத் திசையைப் பார்த்துக் கொண்டிருக்கும்?



(விடைகள் 12ம் பக்கம் பார்க்கவும்)

சிவாஜியின் போர்த் தந்திரம்!

ஹெறாமீதா

சத்திரபதி சிவாஜி கொதித்தெழுந்தார். அந்தப் பயங்கரக் காட்டில் ஆயிரம் மராட்டிய வீரர்களுக்கு நடுவில் சிவாஜி கர்ஜித்தது சிம்ம கர்ஜனையாகவே இருந்தது.

கிழக்குப் பகுதியில் இருக்கும் கோட்டையைக் கைப்பற்றித் தன் வீரர்கள் அனைவரையும் அங்கு நிறுத்திவிட்டு ஆயிரம் வீரர்களுடன் தன் கோட்டையை நோக்கி வந்தார்.

காட்டுப் பாதையில் கோட்டையை நெருங்கிய பொழுதுதான் அந்த அதிர்ச்சி தரும் செய்தியை மந்திரி கூறினர்.

''மகராஜ்! நாம் முழு மூச்சுடன் நம் படைகளை யெல்லாம் திரட்டிக் கோட்டையை அங்கு கைப்பற்றினேம். அதற்குள் ஔரங்கசீப்பின் அன்புக்குப் பாத்திரமான கல்தான் பதினைந்தாயிரம் வீரர்களுடன் நம் கோட்டையை இங்கு முற்றுகையிட்டுள்ளான்.''

''நாம் மிகவும் இக்கட்டான நிலையில் இருக்கிறோம் மந்திரி. நம்மிடம் இருக்கும் ஆயிரம் வீரர்களைக் கொண்டு கல்தானின் பதினைந்தாயிரம் வீரர்களை எதிர்க்க முடியுமா?''

''எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது, மகராஜ்!'' என்றார் மந்திரி.

''என்ன?'' என்று கேட்பது போல் சிவாஜி அவரை நோக்கினர்.

''கிழக்குக் கோட்டைக்கு உடனே செய்தி சொல்லியனுப்புவோம். சேனாதிபதி நம் படைகளுடன் இங்கு வந்ததும் கல்தானை முழு மூச்சுடன் எதிர்க்கலாம்!'' என்றார் மந்திரி.

சிவாஜி கடகடவென்று சிரித்தார்.

''நல்ல யோசனை அமைச்சரே!'' அவர் குரலில் ஏளனம் இழையோடியது.

''சேனாதிபதி இங்கு வரும்வரை கல்தான் நம்மைத் தாக்க மாட்டான் என்பது என்ன நிச்சயம்? அப்படியே அவன் தாக்கா விட்டாலும் சேனாதிபதி இங்கு வந்துசேர ஐந்து நாட்களாவது ஆகுமே. அதற்குள் கல்தான் நம் கோட்டையில் கொடி கட்டி விடுவானே!''

''கோட்டை அவ்வளவு சுலபத்தில் விழுந்துவிடும் என்று நினைக்கிறீர்களா, மகராஜ்?'' என்றார் மந்திரி.

''ஆம். கோட்டையில் போதிய உணவைச் சேமித்து வைக்கவில்லை. போதிய வீரர்களும் இல்லை. சேனாதிபதி இங்கு வருவதும் ஆபத்து. ஏனென்னில், அவர் இங்கு வந்து விட்டால் நாம் கைப்பற்றிய கோட்டை அங்கு எதிரிகளுக்கு இரையாகிவிடும்'' என்றார் சிவாஜி.

உடனே மந்திரி, ''மகராஜ்! வேறு வழியில்லை. நாம் உடனே கிழக்குக் கோட்டையை நோக்கிப் போய்விடலாம்'' இந்த யோசனையை மந்திரி சொன்னதுதான் தாமதம், சிவாஜியின் கண்கள் கனலைக் கக்கியது.

''மந்திரியாரே, என்ன வார்த்தையைக் கூறினீர்கள்? புறமுதுகிட்டா ஓடச் சொல்கிறீர்கள்? இந்த சிவாஜி போரில் தந்திரத்தைக் கையாண்டு வெற்றி பெறுவான். இல்லையேல் வீரத்தோடு போரிட்டு மாண்டு போவான்'' என்று கர்ஜித்தார் மன்னர்.

மந்திரியும் வீரர்களும் திக்பிரமை பிடித்து நின்றனர்.

கல்தான் தன் மந்திரிகளையும் சேனாதிபதிகளையும் ஒன்றுகூட்டி மேற்கொண்டு என்ன செய்வது என்று திட்டத்தைச் சொன்னான்.

''சேனாதிபதி! சிவாஜி இந்த அடர்ந்த காட்டில் கூடாரம் அடித்துத் தங்கியிருக்கிறான். ஆயிரம் வீரர்களுடன் நம்மை எதிர்க்கும் அளவுக்கு சிவாஜி முட்டாள் இல்லை!''

''உண்மைதான், கல்தான்! உடனே நாம் கோட்டையைத் தாக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும்!''

''சேனாதிபதி! கோட்டை எங்கும் போகாது. ஆனால் சிவாஜி கிழக்குக் கோட்டையை நோக்கி ஓடிவிடுவான். ஆகவே, சிவாஜியையும் அவனுடன் வந்த ஆயிரம் வீரர்களையும் காட்டிலேயே நிர்மூலமாக்குவோம். கோட்டைக்கு வேண்டுமானால் ஆயிரம் வீரர்களை நிறுத்தி வைத்து முற்றுகையை நீடிக்கச் செய்வோம்.''

''சரி கல்தான்! நாளைக் காலை தாக்குதலைத் தொடங்குவதற்கு நம் படை வீரர்களை ஆயத்தம் செய்கின்றேன்!''

''சேனாதிபதி! உமது மூளை கெட்டுத்தான் போய்விட்டது. நாளைக் காலை வரை சிவாஜி காத்திருக்க மாட்டான். இன்று இரவு முன் ஜாமத்திலேயே தாக்குதலைத் தொடங்கிவிட வேண்டும்!''



''இரவு நேரத்திலா?''

''ஆம்! தூங்கச் செல்லும் நேரத்தில் எதிர்பாராமல் தாக்கி அவர்கள் அனைவரையும் நிரந்தரமாகத் தூங்கச்செய்ய வேண்டும்!''

சேனாதிபதி ஆயிரம் வீரர்களைக் கோட்டையைச் சுற்றி வைத்துவிட்டு, மீதம் உள்ள படைகளை யெல்லாம் தாக்குதலைத் தொடங்குவதற்கு ஆயத்தம் ஆக்கினான்.

*　　*　　*

பாடாரத்தில் சிவாஜி நெடு நேரம் வரை சிந்தித்துவிட்டு ஒரு முடிவுக்கு வந்தார். ''எப்படியும் கல்தானின் படைகள் நம்மை இன்று இரவே தாக்கும்! அந்தப் படைகளையும் சமாளித்துக் கோட்டையையும் கைப்பற்ற வேண்டும்''. அவர் மனத்துக்குள் ஒரு திட்டம் தீட்டினார்.

தன் வீரர்களுக்கு தன் திட்டத்தை விவரமாகக் கூறி, எப்படி செயலாற்றுவது என்பதையும் விளக்கினார். இந்தத் திட்டத்தைக் கேட்டதும் மராட்டிய வீரர்களின் முகங்கள் மலர்ந்தன. சிவாஜியின் போர்த் தந்திரத்தைக் கண்டு அசந்து போனார்கள்.

இருட்டத் தொடங்கியது. சில மணி நேரத்தில் கிராமத்துக்குச் சென்றிருந்த வீரர்கள் ஐந்நூறு காளை மாடுகளுடன் வந்தனர். ஒவ்வொரு காளை மாட்டின் கொம்புகளிலும் எண்ணெய் தோய்ந்த துணிகளைப் பந்தங்களாகக் கட்டினர்.

ஒரு மராட்டிய வீரன் மரத்தின் மீது ஏறிக் கோட்டையைப் பார்த்தான். ''கல்தானின் படைகள் புறப்பட்டு விட்டன!'' என்று கீழிருந்தவர்களுக்குத் தகவல் கொடுத்தான்.

அடுத்த விநாடி காளை மாடுகளின் கொம்புகளில் கட்டியிருந்த பந்தங்களுக்குத் தீ வைத்தனர்.

''மாடுகள் சிதறி ஓடாமல் இருக்கக் கயிற்றினால் கட்டி விட்டீர்கள் அல்லவா?'' என்று கேட்டார் சிவாஜி.

''கட்டிவிட்டோம், பிரபு!''


''ம்...'' என்றார் சிவாஜி.

உடனே வீரர்கள் காளை மாடுகளைக் காட்டுப் பாதையில் விரட்டி விட்டனர்.




(மூளைக்கு வேலை — விடைகள்)


1. விடை :



2. விடை :




3. விடை :




4. விடை : *12-10.*

5. விடை: கடிகாரக் கூண்டுக்கு நான்கு பக்கங்களாயிற்றே. ஒரு பக்கத்து முட்களுக்கு ஒன்றரை டன். நான்கு பக்கத்துக்கு ஆறு டன்கள்.

6. விடை :



7. விடை:



8. விடை: கிட்டுவுடையது தெற்குப் பார்த்த வீடு.

அவைகள் தலை தெறிக்க ஓடத் துவங்கின. அந்தக் கரிய இருட்டில் நூற்றுக் கணக்கானவர்கள் தீப்பந்தங்களுடன் ஓடுவது போல் அவை காட்சி யளித்தன. மராட்டிய வீரர்கள் ஆங்காங்கு புதர்களில் பதுங்கிக் கொண்டனர்.

கல்தான் படைகளுடன் காட்டுக்குள் நுழைந்தான். அந்த இருட்டில் நூற்றுக் கணக்கான தீப்பந்தங்கள் ஓடுவதைக் கண்டான்.

''சேனாதிபதி! நம்மைக் கண்டு அஞ்சி சிவாஜி தன் வீரர்களுடன் தீப்பந்தங்களுடன் ஓடுவது தெரிகிறதா?'' என்றான் கல்தான்.

''ஆம்! தீப்பந்தங்கள் தெரிகின்றன. அட, என்னமாய் ஓடுகிறார்கள்!'' என்று வியப்புத் தெரிவித்தான் சேனாதிபதி.

''புறப்படு, சேனாதிபதி! துரத்திச் செல்வோம். எங்கு சென்றாலும்விரட்டி நிர்மூலமாக்குவோம். புறப்படுங்கள்'' என்று கல்தான் கர்ஜித்தார்.

அடுத்த கணம் கல்தானின் படைகள் தீப்பந்தங்களைத் துரத்தத் தொடங்கின.

ஆனால் சிவாஜி தன் வீரர்களுடன் கோட்டையைச் சுற்றியிருந்த கல்தானின் வீரர்களை அவர்கள் எதிர்பாராத விதமாய்த் தாக்கத் தொடங்கினார்.

கல்தான் பதினான்காயிரம் வீரர்களுடன் தீப்பந்தங்களை நோக்கி விரைந்தபொழுது பயங்கர சப்தம் எழுந்தது. நிறையப் பேர் தங்களைத் துரத்திக் கொண்டு வருவதை அறிந்த காளை மாடுகள் பயம் மேலிட்டு முன்னிலும் பன்மடங்கு வேகத்துடன் காட்டுப் பாதையில் பிய்த்துக் கொண்டு ஓடத் துவங்கின. தீப்பந்தங்கள் வேகமாக நகர்வதைக் கண்ட கல்தான் படைகள் ''நம்மைக் கண்டு பயந்து வேகமாக ஓடுகிறார்கள். அவர்களைத் தப்ப விடாதீர்கள். துரத்துங்கள்! விடாதீர்கள்!'' என்று கோஷமிட்டு உற்சாகமாகத் துரத்தினர். கிட்டத்தட்ட இரவு முழுவதும் இந்த வேகம் தொடர்ந்தது.

விடியற்காலையில் வெளிச்சம் மெல்லப் பரவியது. தீப்பந்தங்களுடன் ஓடிக் கொண்டிருப்பது மராட்டிய வீரர்கள் அல்ல, காளை மாடுகள்தான் என்பது அப்பொழுதுதான் அவர்களுக்குப் புலனாகியது. 'சே! இந்தக் காளை மாடுகளையா இரவு முழுவதும் துரத்திக் கொண்டு வந்தோம்! ஏமாந்தோமே!' என்று கல்தானும் அவன் படை வீரர்களும் வெட்கித் தலை குனிந்தனர்.


அப்பொழுது ஒற்றன் ஒருவன் கல்தானை நோக்கிக் குதிரையில் வேகமாக வந்து இறங்கினான்.


''கல்தான் மகராஜ்! சிவாஜி கோட்டையை முற்றுகையிட்டிருந்த நம் வீரர்களை நிர்மூலமாக்கிவிட்டு, கோட்டையைக் காப்பாற்றிக் கொண்டுவிட்டார்!''


''வாய்ப்பு போய்விட்டது. இனி சிவாஜியை அசைக்கக் கூட முடியாது!''

கல்தானின் வாய் முணுமுணுத்தது; அவன் முகம் தோல்வியினால் விகாரமாக மாறியது!

சிரிக்கச் சிரிக்க








''காலங் கார்த்தாலே கறிகாய் வாங்கிவாடாங்கறியே அம்மா? இந்தப் பனியிலே நாய் கூட வெளியே போகாது.''

''அப்படியானால் நாயை இங்கேயே விட்டு விட்டு நீ மட்டும் போய் வாங்கி வா!''

● ● ●


''டேய் முட்டையிலிருந்து கோழிக் குஞ்சு வெளியிலே வரது எனக்கு ஆச்சரியமா இருக்குடா!''

''அதைவிட ஆச்சரியம் முட்டைக்குள்ளே அது எப்படிப் போச்சுங்கறது தாண்டா!''



''ஏண்டா இப்படிக் காந்தம் உன் உடம்பிலே ஒட்டிக்கிறது?''


''கொஞ்ச நாளா நான் 'அயர்ன் டானிக்' சாப்பிட்டுண்டு வரேனுக்கும்!''






நந்து சுந்து மந்து (22)

கதை: வாண்டுமாமா
சித்திரம்: செல்லம்




ஆனால் மந்துவின் தோழன் அதற்கு முன்பே வலைக்குள் மாட்டிக் கொண்டு விட்டான்.
ஐயையோ, சாமியோ! உன்னோட யானையா அதுக்குள்ளே இங்கே அவசரப்பட்டுக் கிட்டு வரச் சொன்னாங்க?
ம்... கட... இனி உன் பாச்சா ஏதும் பலிக்காது.
இத்தனை பாடுபட்டுக் கடைசியில் இப்படியா ஆகணும்... ம்...
இது அப்படியொன்றும் பலமான சிறையில்லை. மந்துப்பிரதேசத்துத் தற்காலிகக் கொட்டடி தானே. குழிதோண்டிப் போக முடியுமான்னு பார்க்கலாம்.
ஆஹா! நீயல்லவோ உண்மைத் தோழன்! எப்படியெல்லாம் உதவி செய்யறே!
தன் நண்பனைத் தப்ப வைத்துவிட்டுத் தானும் பின் தொடரும் போது மந்து மாட்டிக்கொள்ளுகிறது.
வாங்க... வாங்க, ஓடியாங்க! கைதி தப்பி ஓடிவிட்டான். இதோ இந்தக் குரங்கோட வேலைதான்.
நந்துவும் சங்குவும் சிறையில் உள்ள மந்துவைக் காண வருகின்றனர், சரியான பூசை கொடுத்து ஜாமீனில் அழைத்துப் போக.
வா இப்படி... வா... ம்... காலிப் பயலே! எத்தனை பெரிய வேலையெல்லாம் செய்திருக்கே நீ? உன் முதுகுத் தோலை உரிக்காமல் விடப் போவதில்லை.
தொடரும்

நியான் விளக்கு

நியான் ஸைன்

நகரத்தில் இரவு வேளையில் பிரதான வீதி வழியாகப் போகிறோம். வித விதமான வண்ணங்களில் விளம்பர விளக்குகள் பளிச்சிடுகின்றன. பொதுவாக வண்ண வண்ண ஒளி உமிழும் இத்தகைய விளம்பர விளக்குகளை 'நியான் ஸைன்' என்று கூறுகிறோம். ஆனால் உண்மையில் தகதகக்கும் எல்லா விளக்குகளுமே நியான் வாயுவினால் ஆனவையல்ல. நியான் வாயுவைப்போலவே வேறு பல வாயுக்களுக்கும் இப்படி ஒளிரும் குணம் உண்டு. ஹீலியம், ஆர்கான், க்ரப்டான், சேனான் ஆகிய வாயுக்களையும் இம்மாதிரி ஒளிரும் விளக்குகளுக்குப் பயன்படுத்துகிறார்கள். ஒவ்வொரு வாயுவிலும் மின்சாரம் பாயும்போது வெவ்வேறு விதமான வண்ணங்களை உமிழுகிறது. உஷ்ண நிலை, அழுத்தம், மின்சார வோல்டேஜ் இவைகளுக்கு ஏற்ப இந்த வாயுக்களிலிருந்து வெளிப்படும் வெளிச்சத்தின் வண்ணமும் மாறுபடக்கூடியது. நியான் வாயுவில் மின்சக்தி பாயும்போது

இன்ஸுலின்

சர்க்கரை வியாதி (டயபடீஸ்) உள்ளவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊசி மருந்துக்கு இன்ஸுலின் என்று பெயர். உட்கொள்ளும் உணவிலிருந்து மாவுப் பண்டத்தையும் சர்க்கரையையும் எடுத்துச் சக்தியாக மாற்றும் திறன் இல்லாதவர்களுக்கு டயபடீஸ் என்ற சர்க்கரை நோய் வருகிறது. பயன்படுத்தாத சர்க்கரை உடலில் சேர்ந்து சர்க்கரை அதிகமாகி விடுகிறது. ஸ்டார்ச் என்ற மாவுப் பண்டத்தையும் சர்க்கரையையும் சக்தியாக மாற்றக் கூடிய பொருளான இன்ஸுலினை நம் உடலில் உள்ள ஒரு பெரிய சுரப்பி உற்பத்தி செய்கிறது. இந்தச் சுரப்பிக்கு பாங்கிரியாஸ் (*Pancreas*) என்று பெயர். டயாபடீஸ் நோய் உள்ள மனிதனின் உடலில் உள்ள இந்தச் சுரப்பி ஒன்று தேவையான இன்ஸுலினை உற்பத்தி செய்யாதிருக்க வேண்டும் அல்லது உற்பத்தி செய்த இன்ஸுலினைப் பயன்படுத்தும் சக்தி இல்லாதிருக்க வேண்டும். இதற்குச் சிகிச்சை செய்யாவிடில் நோயாளி தாங்க முடியாத தாகத்தினால் தவிப்பான். உடல் எடை குறையும். ஓய்ச்சலாக இருக்கும். நினைவு இழக்குமளவுக்குப்



பலவீனம் ஏற்படும். மரணமும் ஏற்படலாம்.

ஆனால் முன்னேறி வரும் விஞ்ஞான உலகில் இன்று சர்க்கரை நோய் உள்ள யாருக்கும் மேற்கூறிய நிலை ஏற்படுவதில்லை. ஏனென்றால் இன்ஸுலினைத் தயாரிக்கத் தெரிந்து கொண்டிருக்கிறான் மனிதன். டயபடிக் நோயாளி தினமும்

புரோட்டீன் என்றால் என்ன?

உயிரோடு இயங்கும் ஒவ்வொரு ஜீவனிலும் புரோட்டீன் என்னும் புரதம் அடங்கியிருக்கிறது. புரோடீன் என்பது கிரேக்க வார்த்தை. 'முதன்மையான' என்று பொருள் அதற்கு. வாழ்வதற்கு முக்கியமானது புரோட்டீன்கள் என்பது புலனாகிறது அல்லவா?

இந்தப் புரோட்டீன் என்பது அமினோ அமிலங்களின் சேர்க்கையினால் உருவாகிறது. இருபதுக்கும் அதிகமான அமினோ அமில வகைகள் உள்ளன. ஒவ்வொரு அமினோ அமில வகைப் பிரிவும் நைட்ரஜன், கார்பன், ஹைட்ரஜன், ஆக்ஸிஜன் ஆகிய ரஸாயனப் பொருள்களின் கலவையாலானவையே. புரோட்டீன்களில் ஆயிரக்கணக்கான வகைகள் இருக்கின்றன. உதாரணமாக, இறைச்சியில் புரோட்டீன் அதிகமாக உள்ளது என்று உங்களுக்கெல்லாம் தெரியும். ஆனால் இறைச்சி பன்னிரண்டிலிருந்து பதினைந்து வகையான புரோட்டீன்களால் ஆக்கப்பட்டது என்ற உண்மை உங்களுக்குத் தெரிந்திருக்காது.

நாம் உயிர் வாழ்வதற்குப் பலவகையான உணவுப் பொருள்களை உட்கொள்ள வேண்டும். ஏனென்றால் அவைகளில் புரோட்டீன்கள் அடங்கியிருக்கின்றன. பால், முட்டை, இறைச்சி, மீன் பட்டாணி, அவரை, நிலக்கடலை, பருப்பு வகைகள் — இவைகளெல்லாம் மனிதன் உயிர் வாழ்வதற்கு அவசியமான உணவுப்பொருள்கள் நமக்குத் தேவையான அமினோ அமிலங்களை நமது உடலால் தயாரித்துக் கொள்ள முடி

நியான் அணுக்கள் உண்டாகி ஒளி தருகிறது. மின்சக்தி நியானின் சில அணுக்களைத் தாக்கும்போது நியான் எலெக்ட்ரான்கள் வெளிப்படுகின்றன. இந்த எலக்ட்ரான்கள் நியான் அணுக்களுடன் மறுபடி சேரும்போது ஏற்படும் சக்தி ஒளியாக வெளிப்படுகிறது. மேலே குறிப்பிட்ட வாயுக்களெல்லாம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவை. இவைகளை அபூர்வ வாயுக்கள் என்றும் அழைப்பதுண்டு. ஏனென்றால் இவை அதிகமாகக் கிடைக்காது. இந்த வாயுக்களெல்லாம் ரசாயன மாற்றத்துக்கு உட்படாதவை. அதாவது இவைகள் எரியக்கூடியவையல்ல. சாதாரண நிலையில் ரசாயனக் கலவைகளை உண்டாக்குவதில்லை. ஹீலியம் வாயுவைத் தவிர மற்றவை சாதாரணக் காற்றிலேயே கிடைக்கின்றன. காற்றிலுள்ள பிராண வாயு, நைட்ரஜன், கரியமில வாயு, ஆகியவற்றுடன் கலந்து காணப்படுகின்றன. இந்த அபூர்வ வாயுக்களைக் காற்றிலிருந்து பிரித்தெடுக்கக் காற்றை மிக மிகக் குறைவான உஷ்ண நிலையில் குளிர வைக்கும்போது காற்று திரவமாக மாறும். இப்படித் திரவமான காற்றை மிக உயரமான 'டவர்'களுக்கு அனுப்பிச் சூடாக்குவார்கள். ஒவ்வொரு வாயுவும் அதனதன் கொதிநிலைக்கு வந்ததும் திரவம் வாயுக்களாகப் பிரியும். இதைச் சேமித்துக் கொள்வார்கள்.

இன்ஸுலின் மருந்தை ஊசி மூலம் உடலில் செலுத்திக் கொண்டு கட்டுப்பாடான உணவு முறைகளைக் கடைப்பிடித்தால் இயல்பான வாழ்க்கை நடத்தலாம்.


ஆரோக்கியமான பிராணியின் உடலில் உள்ள பாங்கிரியாஸ் சுரப்பியிலிருந்து இன்ஸுலினை எடுத்து இவர்களுக்குக் கொடுத்துவிடலாம். ஆனால் மிருகங்களின் சுரப்பியிலிருந்து இன்ஸுலினை எடுக்கும் வழி தெரியவில்லை.

ஃபிரடரிக் கிராண்ட் பாண்டிங் என்ற கனடா தேசத்தைச் சேர்ந்த ஒரு டாக்டர் இதில் வெற்றி கண்டார். ஒண்டாரியோ மகாணத்திலுள்ள அலிஸ்டன் என்னுமிடத்தில் 1891ல் பிறந்த இவர் லண்டன் கல்லூரி ஒன்றில் போதகராகப் பணியாற்றி வந்தார். ஒருநாள் மாலை பாங்கிரியாஸ் சுரப்பி பற்றிய சொற்பொழிவு ஒன்றைத் தயாரித்துக் கொண்டிருக்கும்போது திடீரென்று அவருக்குப் பிராணிகளின் உடலிலிருந்து இன்ஸுலினைச் சேகரிப்பதற்கான வழி ஒன்று புலப்பட்டது. டொராண்டோ சர்வ கலாசாலைக்குப் போய் 1921 மே மாதத்தில் பாண்டிங் தம் ஆராய்ச்சியைத் தொடங்கினார். இரவு பகல் விடாமல் சோதனைகள் நடத்திப் பல வாரங்கள் பாடுபட்டு ஒரு நாயின் பாங்கிரியாஸ் சுரப்பியிலிருந்து இன்ஸுலினைச் சேகரித்தார். 1922 ஜனவரியில் பல சோதனைகளுக்குப் பிறகு ஒரு டயபடிக் நோயாளிக்கு இந்த இன்ஸுலினைச் செலுத்தினார்கள். அந்த நோயாளி ஒரு பையன். மரணத்தின் வாசலில் இருந்தான். இன்ஸுலின் செலுத்தியதும் வியக்கத்தக்க விதத்தில் பையனின் நிலை அபிவிருத்தி அடைந்தது. வைத்திய உலகில் ஒரு புதிய சாதனை. சர்க்கரை நோயைக் குணப்படுத்திவிட முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. நிறைய அவரைக்காய் சேர்த்துக் கொள்வதன் மூலம் இன்சுலினுக்குச் சமமாகச் சர்க்கரை வியாதி குணமாகிறது என்பது அண்மையில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

யாது. நாம் உண்ணும் உணவுப் பொருள்களிலுள்ள புரோட்டீன்களிலிருந்து நமக்குத் தேவையான அமினோ அமிலங்களை நாம் பெறுகிறோம். இவைகளை 'அத்தியாவசியமான அமினோ அமிலங்கள்' (Essential amino acids) என்று கூறுவார்கள். சில வகை அமினோ அமிலங்கள் — அதில் குறிப்பிட்ட அளவு இருந்தால்தான் உடலின் திசுக்கள் இயங்க முடியும். தாவரப் புரதம், பட்டாணி, கீரை, பருப்பு வகைகளில் எல்லாவிதமான அமினோ அமிலங்களும் இருப்பதில்லை.

வேண்டும்போது எடுத்துக் கொள்ளலாம் என்று மனிதன் அமினோ அமிலங்களைத் தன் உடலில் சேர்த்து வைத்துக் கொள்ளவும் முடியாது. வெவ்வேறு வகையான அமினோ அமிலங்களின் தேவையை ஒரே சமயத்தில்தான் உடலுக்கு வழங்க வேண்டியுள்ளது.

மாறுபட்ட புரோட்டீன்களைக் கொண்ட உணவு வகைகளை ஒவ்வொரு சாப்பாட்டிலும் நாம் உட்கொள்ள வேண்டும். இதனால் நமக்குத் தேவையானதும் அத்தியாவசியமான அமினோ அமிலங்களைப் பெறவும் உடலுக்கு வேண்டிய புரதச் சத்துக்களை ஈடு செய்யவும் முடியும்.



''குடு... குடு... குடு...! ஐயாவுக்கு நல்ல காலம் பொறக்குது... நல்ல காலம் பொறக்குது... ஐக்கம்மா நல்ல சேதி சொல்றா... ஏனைக்குக் கிளிஞ்ச வேட்டி துணி கொடுப்பாரு...'' வாசலிலிருந்து குடுகுடுப்பைக்காரன் ஆருடத்தோடு 'அப்ளிகேஷனை'யும் கூடச் சேர்த்து விட்டான்.

''நல்ல காலம் பொறக்கறப்போ வா' என்று எரிந்து விழுந்தாள் அம்மா.

''அம்மாவுக்குக் கொள்ளை காலம் வருது. அம்மாவுக்கு கொள்ளை காலம் காலம் வருது...!''

அம்மாவுக்குக் கோபந்தான் வந்தது. ''அட, நாசமாப் போறவனே ! காலம் காத்தாலே வந்து கரி நாக்காலே கரிச்சு கொட்டறியே....'' என்றபடி கதவைத் திறக்க வந்தாள்.

''கொள்ளை காலம் வருது. அம்மாவுக்குக் கொள்ளைகாலம் பட்டுப் புடவை வருது.''

அ...அதென்ன, விகடம் பண்ணுகிற குடுகுடுப்பைக்காரன்கூட இருக்கிறானா?

அம்மா கதவைத் திறந்தாள். அப்பாவும் எட்டிப் பார்த்தார்.

பிளாஸ்டிக் உடுக்கையை வைத்துக் கொண்டு அவர்கள் புத்திர சிகாமணி மகேந்திரன்தான் அப்படி நடித்திருக்கிறான். கூட அவன் நண்பன் முரளியும் நின்று கொண்டிருந்தான்.

'' உனக்கு ஏண்டா, இந்தக் கேடு காலம் ?'' என்று அப்பா விசாரித்ததும், ''நாளைக்கு மாறு வேடப் போட்டியிலே ஐயா குடுகுடுப்பைக்காரன் வேஷம் போடப் போறாரு...'' என்றான் பெருமையாக.

''அப்பா 'ராமா ராமா'ன்னு அலையறாரு. நீ என்னடான்னா 'டிராமா, டிராமா'ன்னு அலையறே....''—அம்மா குறைப்பட்டுக் கொண்டாள்.

''ராமரோடே பேரை 'இனிஷி'யலோட சொல்றான் மாமா !'' என்றான் முரளி நண்பனுக்குச் சாதகமாக.

'' அப்பா, குடுகுடுப்பைக்காரன் கிட்டே டிரஸ், டர்பன், குடுகுடுப்பை எல்லாம் வாடகைக்கு வாங்கணும். ஓர் அஞ்சு ரூபா கொடுங்கப்பா.'' கெஞ்சினான் மகேந்திரன்.

'' ஏண்டா, காசு செலவில்லாத வேஷமாப் போடக் கூடாதா ?''

''பகல் வேஷம்தான் போடணும் '' என்று பதில் கொடுத்த மகேந்திரன் அப்பாவிடமிருந்து ஐந்து ரூபாயைக் கறந்து கொண்டான்.

* * *

முரளிக்குக் காலையில் மகேந்திரன் குடுகுடுப்பைக்காரனாக வீட்டு வாசலில் போட்ட ஆட்டமே கண் முன் நின்றது.

'என்னமாய்ப் பேசுகிறான்! இன்னும்... வேஷம் போட்டுவிட்டால் அசல் குடுகுடுப்பைக்காரன்தான்..... ஹூம்' பெருமூச்சு விட்டான். சென்ற முறை அவன்கூடக் குறவன் வேடம் போட்டான். பேச்சு தோற்றம் எதுவுமே எடுபடவில்லை. பெண் வேடம் போட்ட மகேந்திரனுக்குத்தான் பரிசு கிடைத்தது.

'இந்த மகேந்திரன் கலந்து கொண்டால் தனக்குப் பரிசு கிடைக்காது' மனச் சோர்வுற்றுப் புழுங்கினான் முரளி.

அந்தச் சமயம் பார்த்து மகேந்திரன் அவனைத் தேடி வந்தான்.

''டேய், முரளி. நீ எனக்கு ஒரு உதவி பண்ணணும். அப்பா இந்தச் சமயம் பார்த்துக் கொஞ்சம் வேலை வைத்துவிட்டார். முக்கியமான வேலை. அதனாலே, நீ எப்படியாவது ஒரு குடுகுடுப்பைக்காரனைத் தேடிப் பிடித்து எல்லாம் வாங்கி வைத்துவிடு. எனக்காக, ப்ளீஸ்!'' என்று ஐந்து ரூபாயை அவனிடம் கொடுத்தான்.

முரளிக்கு அந்தப் பணத்தை வாங்கும் போதே மனத்தில் ஓர் தீய எண்ணம் துளிர்விட்டது.

அப்படியே வாங்கி வைப்பதாக உறுதி கூறி மகேந்திரனை அனுப்பினான்.



பரிசு கனத்தது

முரளி மகேந்திரனின் வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

மனத்துக்குள் ஒரு திட்டம் உருவாகி இருந்தது.

மகேந்திரனைப் பார்த்து, ''டிரஸ் டர்பன் எல்லாவற்றுக்கும் 'அரேஞ்ஜ்' பண்ணிவிட்டேன். நாளை சாயந்திரம் வீட்டிலேயே கொண்டு வந்து தருவதாகச் சொன்னான்' என்று சொல்லி விடலாம். 'வரும், வரும்' என்று காத்திருப்பது போல் நாமும் நடிக்கலாம். ஏமாந்து போவான். கடைசி நேரத்தில் வேறு வேடம் போடுவதும் சிரமம்; போட்டாலும் சோபிக்காது.'

பக்கத்துத் தெருவைக் கடக்கும் போது எதிரே ஒரு குடுகுடுப்பைக்காரன் வருவது தெரிந்தது.

முரளிக்கு அவனைப் பார்த்ததும், 'ஷாக்' அடித்தாற்போல் ஆயிற்று.

'இந்த வட்டாரத்தில்தானே மகேந்திரனின் வீடு இருக்கிறது? அவன் கண்ணில் இவன் அகப்பட்டால்.... ஒருவேளை இவனிடமே மகேந்திரன் டிரெஸ்ஸுக்கு அரேஞ்ஜ் பண்ணிவிடுவானே ?'

நேராக அந்தக் குடுகுடுப்பைக்காரனிடம் சென்றான்.

முரளியைக் கண்டதும், ''தம்பிக்கு சரஸ்வதி கடாட்சம் இருக்கு. பரீட்சையிலே பஸ்டா வரப் போவுது'' என்றான் உற்சாகத்துடன்.

''அது கிடக்கட்டும். உன்னாலே ஒரு காரியம் ஆகணும். உதவி பண்ணினா அஞ்சு ரூபா தருவேன்.''

குடுகுடுப்பைக்காரனுக்குப் புருவம் ஏறி இறங்கியது. ''ஐக்கம்மா இருக்கா; தப்பாம நடக்கும். என்ன செய்யணும், சொல்லு ?''

''இன்னிக்கு நாளைக்குள்ளே உங்கிட்டே யாராவது இந்த துணி, தலைப் பாகை..... உடுக்கை எல்லாம் வாடகைக்குக் கேட்டா நாளைக்குச் சாயங்காலமாக் கொடுக்கறேன்னு நம்பிக்கையா சொல்லி அனுப்பிச்சுடணும். ஆனா கொடுக்கக் கூடாது'' என்று விளக்கினான்.

''நமக்கராம் வேலை பண்ணணும் கிறே...?'' என்று அவன் முணு முணுக்கவே மூன்று ரூபாயை எடுத்து நீட்டினான் முரளி. ''மீதத்தை அப்புறமா வாங்கிக்கோ.''

''அதுக்கென்ன சாமி !''

பணம் கொடுத்ததும் 'தம்பி' 'சாமி' ஆகிவிட்டான்.

* * *


மறு நாள் மாலை.

முரளி எதிர்பார்த்தபடியே மகேந்திரன் ஏமாந்து போனான்.

''என்னடா, மகேந்திரா, இப்படி கழுத்தறுத்துட்டானே? இப்ப என்னடா செய்யறது?'' — முரளியே அங்கலாய்த்தான்.

''கழுத்திலே பாண்டேஜ் சுத்திக்கிட்டு 'நோயாளி' வேஷம் போடறது'' என்று அப்போதும் தமாஷாகவே பேசிய மகேந்திரன், ''அவன் வராததற்கு நாம என்ன பண்ண முடியும்?'' என்று அவனைச் சமாதானப்படுத்தினான். போட்டிக்கு இன்னும் அரை மணி நேரமே இருந்தது.

தான் போஸ்ட்மேன் வேஷம் போடுவதற்கு எல்லாம் வைத்திருப்பதாகவும்



வேண்டுமானால் அதைப் போட்டுக் கொண்டு நடிக்கும்படியும் முரளி ஒப்புக்குச் சொன்னான். மகேந்திரன் அதற்குச் சம்மதிக்கவில்லை. அது மட்டுமல்லாது அவனே சிரத்தை எடுத்து முரளிக்குக் கிழட்டுப் போஸ்ட்மேனைக வேஷம் போட்டுவிட்டு, ''ஸ்டேஜிலேயே டெலிவரி கொடுப்பது போல் போய் வா. முரட்டு யூனிஃபாமைத் தொட்டுப் பார்த்து, 'சே, என்ன புழுக்கம்? ஒரு ஏர்கண்டிஷன் வாயில்லே யூனிஃபாம் கொடுத்தா நல்லா இருக்கும்' என்று அலுத்தபடி வா'' என்று அவனுக்கு டிரெயினிங்கும் கொடுத்து அனுப்பினான்.

போட்டியில் ஐவர் கலந்து கொண்டனர். முதல் பரிசு முரளிக்கே கிடைத்தது. தனக்கே பரிசு கிடைத்து விட்டது போல் எண்ணி மகிழ்ந்து நண்பனை பாராட்டினான் மகேந்திரன்.

முரளியின் மனம் நெகிழ்ந்துவிட்டது. 'எனக்குப் பரிசு கிடைக்க வேண்டும் என்று இவன் எவ்வளவு நல்ல மனசோடு உதவி செய்தான். பரிசு கிடைத்த பிறகுகூட மனதாரப் பாராட்டுகிறானே.... இவ்வளவு நல்ல நண்பனைப் போய்...'' – முரளிக்கு மனம் பொறுக்கவில்லை.

கண்களிலிருந்து நீர் கசிய நண்பனின் கரங்களைப் பற்றிக் கொண்டு நடந்தவற்றை எல்லாம் அப்படியே ஒப்பித்து விட்டான்.

'' என்னை மன்னிச்சுடுடா மகேந்திரா. உண்மையில் உனக்குத்தான்டா முதல் பரிசு கிடைத்திருக்கணும்'' என்றான் நா தழுதழுக்க.

''எனக்குத்தான் பரிசு கிடைத்து விட்டதே. முதல் பரிசுக்கும் மேலேயே அந்தப் பரிசு நேற்றே கிடைத்து விட்டது'' என்று புதிராகப் பேசிய மகேந்திரன் மூன்று ரூபாய் நோட்டை எடுத்துக் காட்டினான்.

நேற்றுத் தன் திட்டத்துக்குத் தான் பயன்படுத்தியது உண்மையான குடுகுடுப்பைக்காரன் இல்லை; அப்படி வேடமிட்டுத் தன்னைப் பார்க்க வந்து கொண்டிருந்த மகேந்திரன்தான் என்று தெரிந்ததும் முரளிக்கு நெஞ்சை அறுப்பதுபோல் இருந்தது.

மகேந்திரன் எவ்வளவு தேற்றினாலும் முரளி தன் செய்கையின் கேவலத்தை உணரப் பொறுக்காமல் விசித்து விசித்து அழுதான்.

அவன் கையிலிருந்த முதல் பரிசு கனத்தது.



பிள்ளையார் காப்பாற்றினார்

வெ.சிவராமன்

''கஜானனம்... பூத கணாதி ஸேவிதம்''

அம்மா பூஜை அறையில் பிள்ளையாரை வணங்கிக் கொண்டிருப்பது படுக்கையில் புரண்டு கொண்டிருந்த ராஜாவுக்குக் கேட்டது. அவனுக்குத் தூக்கம் தூக்கமாக வந்தது. ''ராஜா! சீக்கிரம் எழுந்திருந்து, பல் தேய்த்து, திருநீறு இட்டுக் கொண்டு கற்பூரத்தைக் கண்ணில் ஒற்றிக்கொள்'' என அம்மா அழைக்கும் குரல் அவனுக்குக் கேட்டது. அவன் பல் தேய்த்து விட்டு வந்தவுடன் அவன் அம்மா அவனிடம் தீபாராதனைத் தட்டை நீட்டியபடியே ''அந்தப் பிள்ளையார்தான் உன்னைக் காப்பாத்தணும்'' என்றாள். அவனோ, ''சரி, சரி காப்பியைக் கொடு'' என்றான்.

ராஜா நல்ல பையன்தான். இந்த வருடம்தான் அவன் எஸ். எஸ். எல்.சி. எழுதியிருந்தான். மிக நன்கு படிப்பான். நல்ல பண்புள்ளவன். பெரியவர்களிடம் மரியாதையாக நடப்பான். ஆனால், அவன் நெஞ்சத்தில் இளமையிலேயே ஊறிப் போனது கடவுள் இல்லை என்ற எண்ணம்தான். அவன் தாயார் அவனுக்கு எவ்வளவோ புத்திமதிகள் சொல்லிப் பார்த்தாள். அவனோ திருந்துவதாயில்லை. அவன் தந்தையோ பெரிய வியாபாரி. அவர் ஊரில் இருந்தால் அல்லவா அவனைத் திருத்துவதற்கு?

ராஜாவின் தாய் அடிக்கடி யானைமுகனிடம் தனது மகன் ராஜாவைத் துன்பத்திலிருந்து காக்குமாறு வேண்டிக்கொள்வாள். அதைக் கேட்கும் ராஜா, ''அம்மா! எனக்குக் கை கால்களா இல்லை? என்னைக் காப்பாற்றிக் கொள்ள எனக்குத் தெரியாதா'' என்று கேலி செய்வான். அவன் தாயோ திகைத்து நிற்பாள். தன் மகனைத் திருத்துமாறு விநாயகரிடமே வேண்டிக் கொள்வாள்.

ஒரு நாள் முதுமலைக்காட்டில் உள்ள அவன் மாமா வீட்டுக்குப் புறப்பட்டான். அவன் மாமா ராஜவேலு காட்டிலாகா அதிகாரி. விடுமுறையை அங்கு கழிப்பது ராஜாவுக்கு மிகவும் பிடிக்கும். காலை ஆறுமணி பஸ்ஸில் முதுமலைக்கு ராஜா புறப்பட்டான். காலை சீக்கிரம் புறப்பட்டால்தான் இருட்டுவதற்கு முன் மாமா வீட்டை அடைய முடியும் என்று எண்ணி ஆறு மணிக்குப் புறப்பட்டான். பஸ்ஸை விட்டிறங்கிச் சிறிது தூரம் காட்டுப் பாதையாக நடந்தால்தான் அவன் மாமா வீட்டை அடைய முடியும். ஆனால் அவன் சென்ற பஸ் பாதி வழியில் 'பிரேக் டவுன்' ஆகிவிட்டது. ஆகையால், அவன் முதுமலைக்குச் செல்லும்போது இரவு எட்டு மணி ஆகிவிட்டது.

அவன் பயந்து கொண்டே காட்டு வழியாகச் சென்று கொண்டிருந்தான். ஆந்தையின் சத்தம் ஒருபுறம்! மற்ற பல விந்தையான சப்தங்கள் ஒருபுறம். திடீரென்று சலசலவென்று ஒரு சத்தம். திரும்பிப் பார்த்தான் ராஜா. இருட்டில் பளீரென்று இரண்டு விளக்குகள் தெரிந்தன புதர் மறைவில் நின்றிருந்த ஒரு சிறுத்தையின் கண்கள்தாம் அவை என்பதை உணர்ந்ததும் 'வீல்' என்று கத்தியபடி மயங்கி விழுந்தான் ராஜா.

தன் முகத்தில் யாரோ தண்ணீர் தெளிப்பதை உணர்ந்த ராஜா மயக்கத்திலிருந்து எழுந்தான். எதிரே பார்த்தான். ஒரு யானை நின்று கொண்டிருந்தது. அருகில் சிறுத்தை இறந்து கிடந்தது. அவனுக்கு என்னென்னவோ எண்ணங்கள்... ''பிள்ளையார்தான் உன்னைக் காப்பாத்தணும்'' என்ற அவன் தாயின் குரல் அவனுக்குக் கேட்டது. தன் முன் நிற்கும் யானையையும், பிள்ளையாரையும் தன் மனக் கண் முன் நிறுத்தினான். மாமா வீட்டுக்கு ஓடி வந்து அவரிடம் அனைத்தையும் கூறினான். அன்றிலிருந்து ராஜா பிள்ளையார் பக்தனாக மாறிவிட்டான்.



ஒன்றே பலவாகும்...

ஒருசிறு சருகே இருந்திட்டால் — அது
ஓடிடும் காற்றில் உதவாமல் ;
சிறுசிறு சருகுகள் பலசேர்ந்தால் — அவை
சிறிய குருவியின் கூடாகும் !

ஒருசிறு நாரே தானிருந்தால் — அதில்
ஒருவிதப் பலமும் இருக்காது
சிறுசிறு நார்கள் பலபிணைந்தால் — அவை
சிறப்பாய்த் தேர்வடம் ஆகிடுமே!

ஒருசிறு துளிநீர் தனித்திருந்தால் — அதை
உறிஞ்சிடும் சூரிய ஒளிஎளிதாய் ;
சிறுசிறு துளிநீர் பலசேர்ந்தால் — அவை
சீறிப் பாயும் நதியாகும் !

ஒருசிறு அரும்பு உண்டென்றால் — அதன்
உண்மை அழகும் தெரியாது ;
சிறுசிறு அரும்புகள் பலதொடுத்தால் — அவை
செம்மையான மாலையாம் !

ஒருசிறு செங்கல் இருந்தாலோ — அது
ஒன்றுக் கும்மே உதவாது ;
சிறுசிறு செங்கல் பலவிருந்தால் — அவை
சிறந்த மனிதரின் வீடாகும் !

ஒருசிறு வார்த்தை மட்டிருந்தால் — அதன்
உண்மை விளக்கம் தெளிவில்லை;
சிறுசிறு வார்த்தைகள் பலசேர்ந்தால்—அவை
சிந்தனை யூட்டும் கவியாகும் !

"கோமதி"



எட்டடுக்கு மாளிகை உச்சியிலே காட்சி!

எட்டடுக்காம் உச்சி இதில்
ஏறிடவே வா வா!
எட்டு திக்கும் நோக்கிடலாம்
இங்கிருந்தே வா வா!

எட்டடுக்கு மாளிகையாம்
இங்கிருந்து காணில்
குட்டையாகத் தெரிகிறதே
கோபுரங்கள் கூட!

நகரமெலாம் ஒரு பெரிய
நந்தவனம் போலே
வகைவகையாய்ச் செழித்த பல
மரங்கள் இதோ பார்பார்!

சாலையெலாம் சிறு கீற்றும்
தவழும் அதில் வண்டி!
மேலிருந்து பார்க்கையிலே
வேடிக்கையே யாவும் !

காலையிலே ஆதவனின்
முதல் கதிரைக் காண்போம்!
மாலையிலே பிறைமதியை
மறையும்வரை காண்போம்.

எட்டடுக்கில் காற்றின் ஆட்டம்
என்ன விளையாட்டு!
கொட்டு மழை மின்னலிடை
கோப விளையாட்டு!

மேல் உயரத் தேவையன்றோ
மிகு கவனம், மேலும்—
மேல் உயர உயர் பணிவு
வேண்டும் எனக் காட்டும்

எட்டடுக்காம் உச்சியிதில்
ஏறிடவே வா வா !
எட்டுத் திக்கும் நோக்கிடலாம்
இங்கிருந்தே வா வா !

தம்பி சீனிவாசன்





பூக்கள்

எத்தனையோ பூக்களம்மா
இந்த உலகிலே!
அத்தனையும் பயன் தருமே
ஏதோ வழியிலே!

குண்டு குண்டாய்ப் பூமலரும்
மல்லிகைக் கொடி
குட்டையான காம்பிருக்கும்
பவள மல்லிகை!
வண்டு மொய்த்துத் தேனெடுக்கும்
வண்ணத் தாமரை!
வாடினாலும் மணங்கமழும்
மகிழம் பூக்களே!

சின்ன மலர் வேம்புகூட
நல்ல மருந்தே!
சிரிப்பதுபோல் மொட்டவிழும்
முல்லைக் கொடியிலே!
பொன்னிறத்துப் பூமலரும்
அலரிச் செடியிலே!
பொட்டுப் பொட்டாய்ப் பூச்சிரிக்கும்
தும்பைச் செடியிலே!

பக்தியோடு பூஜை செய்யப்
பாதிப் பூக்களும்,
பறித்துத் தலையில் சூடிக்கொள்ளக்
கொஞ்சம் பூக்களும்,
சக்தி மிக்க மருந்துக்காகக்
கொஞ்சம் பூக்களும்,
சமைத்து உண்ணச் சுவையளிக்கும்
கொஞ்சம் பூக்களும்.

எத்தனைதான் பூக்களம்மா
இந்த உலகிலே!
அத்தனையும் பயன் தருமே
ஏதோ வழியிலே!

சுப்ர பாலன்

பாட்டி கதை

பாட்டிக் கதையில் இளவரசன்
பறந்து போவான் வேட்டைக்கு
காட்டில் புலியை விரட்டிடுவான்
கல்லிலும், முள்ளிலும் விழுந்திடுவான்

தாகம் எடுக்கும் விரைவினிலே
தண்ணீர் குடிப்பான் குளத்தினிலே
நாகம் வந்து சீறிடுமே
நறுக்கென வெட்டி வீசிடுவான்

தண்ணீர் தானே விலகிடும்
உள்ளே பாதை சென்றிடும்
அங்கே இருக்கும் மாளிகை
அருகில் போவான் வாளுடன்

முரட்டுப் பூதம் போரிடும்
பிறகு செத்தும் போய்விடும்
அரக்கு மாளிகை திறந்திடும்
அங்கே ஒருத்தி சிறையிலே!

அவனின் கதையைச் செல்லிடுவாள்
அரச குமாரி என்றிடுவாள்
அவளை மீட்டுச் செல்வதற்கு
அவனுக்கு வழியைக் கூறிடுவாள்

மந்திரவாதி வந்திடுவான்
மந்திரக் கோலை நீட்டிடுவான்
தந்திரமாக இளவரசன்
மந்திரக் கோலைப் பிடுங்கிடுவான்

சண்டை நடக்கும் இருவருக்கும்
மந்திரவாதி இறந்திடுவான்
சொந்த நாட்டுக்கு இளவரசன்
சேர்ந்து வருவான் பெண்ணுடனே!

திருமணம் நடக்கும் இருவருக்கும்
விருந்து—பாயசம் வடையுடனே!
திருமணம் பார்க்கச் சென்றோரில்
பாட்டியும் இருப்பாள், கதைமுடியும்!

புலேந்திரன்





பங்காரு

ரஜனி, பாலு, கமலி மூவரும் டியூஷன் வாத்தியாரிடம் டியூஷன் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

''அடே பாலு! அங்கே என்ன பார்க்கிறாய்? பாடத்தைக் கவனி! டேபிள் என்ன ஸ்பெல்லிங்?'' என்று அதட்டினார் வாத்தியார்.

பாலுவின் செவியில் ஆசிரியரின் அதட்டல் எங்கே விழுந்தது? அவன் பார்வையும் கவனமும் ஜன்னல் ஓரமாய் வெளியே நின்று கொண்டிருக்கும் அந்தச் சிறுமியின் மீதல்லவா இருந்தது! அந்தச் சிறுமி ஜன்னல் வழியாக அவர்களையே நோக்கியபடி நின்று கொண்டிருந்தாள். சிறுமிக்கு இன்றைக்கெல்லாம் இருந்தால் எட்டு வயதிருக்கும். கிழிசல் ஸ்கர்ட், யாரோ பெரியவர்கள் அணிந்த சோளி, எண்ணெயே காணாத பரட்டைத் தலை, அழுக்கடைந்த மேனி, கையிலே ஒரு டப்பா.

''சார்! பாலு பாடத்தைக் கவனிக்காமல், அதோ நிற்கும் அந்தப் பிச்சைக்காரப் பெண்ணைப் பார்த்துக் கொண்டிருக்கான்!'' என்று கோள் மூட்டினாள் ரஜனி.

''போறியா இல்லையா?'' என்று பிச்சைக்காரப் பெண்ணைப் பார்த்துக் கடிந்து கொண்டாள் அவள்.

''தினம் இப்படித்தான் இது இங்கே வந்து நிற்கிறது'' என்று கூறினாள் கமலி.

ஆசிரியர் சிறுமியை நோக்கினார். கோபம் எழுந்தது. ''ஏய்! குழந்தைகள் படிக்கும் இடத்தில் உனக்கு என்ன வேலை? போ வெளியே!'' என்று கூறியபடியே தன் சட்டைப் பையிலிருந்து ஒரு ஐந்து பைசா நாணயத்தை எடுத்து அந்தச் சிறுமியின் முன்பு வீசிவிட்டு, ஜன்னலைத் தானே மூடிவிட்டுப் பாடத்தை மீண்டும் தொடங்கினார்.

பாடம் முடிந்தது. வாத்தியார் வெளியேறியதும், கமலி மீண்டும் ஜன்னலைத் திறந்து பார்த்தாள். ஏழைச் சிறுமியைக் காணவில்லை. ஆசிரியர் வீசிய ஐந்து காசு தரையில் சீந்துவாரற்றுக் கிடந்தது!

''அடி ரஜனி! இதோ பார்! நம் வாத்தியார் போனால் போகட்டும் ஏழையாச்சே என்று ஐந்து பைசா போட்டாரல்லவா? அந்தப் பிச்சைக்காரப் பெண்ணுக்கு எத்தனை திமிர் பார்த்தாயா? காசை எடுத்துக் கொள்ளவில்லை! நாளைக்கு வரட்டும்!'' என்று கோபத்துடன் சொன்னாள்.

''அவள் தலையிலே தண்ணீர் ஊற்றித் துரத்தியடிக்கிறேனா இல்லையா பார்!''



என்றான் பாலு. மறுநாள் வழக்கம் போல் வாத்தியார் வந்தார்.

''சார்! நேற்று நீங்கள் அந்தப் பிச்சைக்காரப் பெண்ணுக்கு ஐந்து பைசா போட்டீர்கள் அல்லவா? அதை அவள் எடுத்துக் கொள்ளவே யில்லை. என்ன திமிர் பார்த்தீர்களா?'' என்று கூறினாள் கமலி.

''இன்று அவள் வரட்டும். தண்ணீர் கொட்டுகிறேன், தலையிலே'' என்றான் பாலு.

''தலையிலே நறுக்கென்று ஓங்கிக் குட்டாவிட்டால் என் பெயர் ரஜனி இல்லை!'' என்று கூறினாள் ரஜனி.

வாத்தியார் கையமர்த்தி விட்டு நிதானமான குரலில் கூறினார்:

''பாலு! நீ அந்தச் சிறுமியின் தலையில் தண்ணீர் கொட்டவும் வேண்டாம்; ரஜனி அவள் தலையிலே ஓங்கி நறுக்கென்று குட்டவும் தேவையில்லை.''

''ஏன் சார்! ஓர் ஏழைப் பெண்ணுக்கு இத்தனை திமிர் இருக்கலாமா?'' என்று ஏககாலத்தில் மூவரும் கேட்டார்கள்.

''குழந்தைகளே! அவள் ஏழை தான். ஆனால் பிச்சை எடுக்கும் நோக்கத்துடன் இங்கே நிற்கவில்லை. தானும் பிற குழந்தைகளைப் போலப் படிக்க வேண்டும் என்ற ஆசையினால்தான் நிற்கிறாளாம். அவளுடைய தகப்பன் தன் கூடப் பிச்சை எடுக்க அவளையும் இட்டுக் கொண்டு போய்விடுவது வழக்கமாம். ஆனால் அவளுக்குப் பிச்சை எடுக்கப் பிடிக்கவில்லையாம். அந்த ஏழைச் சிறுமிக்குக்கூடப் பிச்சை எடுத்தல் இழிவானது என்று தெரிந்திருக்கிறது. எனவே தகப்பனுக்குத் தெரியாமல் ரகசியமாய், இந்த ஜன்னல் ஓரமாய் தினமும் நின்று கொண்டு நான் சொல்லிக் கொடுக்கும் பாடங்களைக் கவனித்து வருகிறாளாம். இன்று காலை அந்தச் சிறுமியைப் பஜாரில் கண்டேன். அவள்தான் இவ்விஷயங்களை என்னிடம் கூறினாள். ''சார்; எனக்கும் படிப்புச் சொல்லித் தாருங்கள் சார்! 'டேபிள்' ஸ்பெல்லிங் சொல்லட்டுமா சார்? டி.ஏ.பி.எல்.இ. சரியா சார்?'' என்று கண்ணீர் ததும்பக் கேட்டாள். சரி என்று ஒப்புக் கொண்டேன். தினம் மாலை என் வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கிறேன். ஆகையால் குழந்தைகளே, இனி பங்காருவை அந்தச் சிறுமியின் பெயர் இதுதான்— கேவலமாய்ப் பேசாதீர்கள். தெலுங்கிலே பங்காரு என்றால் தங்கம் என்று பொருள். ஏழையாய்ப் பிறந்துவிட்டாலும் அவள் உண்மையில் தங்கம்!'' என்று கூறினார் வாத்தியார்.



கோண்டு இனத்தவர்

டாக்டர் எஸ்.எஸ்.சசி

வீட்டில் ஒரு சத்தமும் இல்லை. குழந்தைகள் எங்காவது விளையாடப் போயிருக்கிறார்களோ என்னவோ என்று நினைத்தேன். ஆனால் எல்லோரும் உள்ளேதான் இருந்தார்கள். வழக்கமான கூச்சலும் பரபரப்பும் இல்லை. குழந்தைகளின் கண்களும் கலங்கியிருந்தன.

''என்ன இது? ஏன் எல்லோரும் என்னவோ மாதிரி இருக்கீங்க? அம்மாகிட்டே ஏதானும் வசமா வாங்கினீங்களா?'' என்றேன்.

ஒருசில நிமிஷத்துக்குப் பதில் ஏதும் வரவில்லை. பிறகு கீதா திக்கிக் கொண்டே, ''சாமித் தாத்தா செத்துட்டாரு, அப்பா! தந்தி வந்திருக்கு'' என்றாள். என்னால் நம்ப முடியவில்லை. இடிந்து விட்டேன். அவருடைய முகம் தோன்றித் தோன்றி மறைந்தது. உடனே அவரது உடலைக் காணவேண்டுமென்ற ஆவல். டில்லியில் இறந்துவிட்ட ஒருவரைச் சென்னையில் உள்ள நான் எப்படிப் பார்க்க முடியும்? சிறிது சமாளித்துக் கொண்டு குழந்தைகளைப் பார்த்தேன். இன்னும் மௌனம். எப்படியாவது குழந்தைகளின் கவனத்தை திருப்பி வருத்தத்தைப் போக்க யோசனை செய்தேன். வழி கிடைத்தது.


''இதுக்கெல்லாம் வருத்தப்பட்டால் ஒரு லாபமும் இல்லை. துயரம் வரும் போதுதான் கோண்டு பெண் நடந்து கொண்டது போலத் தைரியமாயிருக்கணும்'' என்றேன்.

''எப்படியப்பா?'' என்றாள் ஜயந்தி.

''சொல்றேன். ஒரு கோண்டுப் பெண் மரத்திலிருந்து தேன் எடுத்துக் கொண்டிருந்தாள். பக்கத்தில் வைக்கோலைப் படுக்கையாகப் பரப்பி வைச்சு அது மேலே தனது குழந்தையைப் படுக்கப் போட்டிருந்தாள். சிறிது நேரம் கழித்துக் குழந்தை திடீரென்று அலறியது. திரும்பிப் பார்த்தால் குழந்தையின் அருகில் படம் எடுத்துக் கொண்டிருந்த ஒரு பாம்பு அதைக் கடித்து விட்டு மறைந்து விட்டது. உடனே பதறியபடி ஓடிவந்த தாய் குழந்தையை எடுத்துக் கதறினாள். ஆனால் குழந்தையின் உடலில் விஷம் பரவி, செத்து விட்டது.''

''அட பாவமே, அப்புறம் என்ன ஆச்சு?'' என்றான் கண்ணன் அநுதாபக் குரலில்.

''சத்தம் கேட்டு வந்தவர்கள் குழந்தையின் உயிர் போய்விட்டதை அறிந்து



'நடந்தது நடந்து விட்டது. அதைப் புதைத்து விடலாம்' என்று சொன்னார்கள். ஆனால் குழந்தையைத் தர தாய் மறுத்து மார்போடு அணைத்துக் கொண்டாள். எல்லாத் தெய்வங்களையும் வேண்டி, உயிர்ப் பிச்சை கேட்டாள். இவளுடைய அளவு கடந்த தாய்ப் பாசத்தைப் பார்த்து மனம் இறங்கிய பார்வதி, சிவனைப் பார்த்து உடனே குழந்தைக்கு உயிர் தர வேண்டும் என்று வேண்ட, சிவனும் அவ்வாறே செய்தாராம். இறந்த குழந்தை மீண்டும் உயிர் பெற்றதை எண்ணி யாவரும் ஆடிப் பாடினார்களாம். இன்றைக்கும் இக்கதையைக் கோண்டு இன மக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.''

''கோண்டு அம்மா மாதிரி நம்ம அம்மா இல்லையே. அடிக்கடி அடிக்கிறாளே'' என்று குறுக்கிட்டாள் ஜெயந்தி. இரண்டாவது தடவை மைசூர்பாகு வேண்டும் என்று அடம் பிடித்ததால் அவளுக்குச் செம்மையாக அடி கிடைத்தது. அந்த ஆத்திரம் அவளுக்கு.

''அது சரி, கோண்டு இன மக்களைப் பற்றி மேலும் சொல்லுங்க'' என்றான் கண்ணன்.

''மத்தியப் பிரதேசத்தில் உள்ள சாத்புரா குன்றுகளின் அருகில் இவர்கள் வசிக்கிறார்கள். பீஹார், ஒரிஸ்ஸா, ஆந்திரப் பிரதேசம் முதலிய ராஜ்யங்களின் சில இடங்களிலும் காணப்படுகின்றனர். இவர்கள் நேர்மையானவர்கள். நாணய மிக்கவர்கள். சொன்ன சொல் தவற மாட்டார்கள். கடன் வைத்து விட்டுத் தகப்பனார் இறந்து விட்டால், அவருடைய மகன், எப்படியாவது கடனைத் தீர்த்துவிட்டுத்தான் மறு வேலை பார்ப்பான்.''

''பின்னே கண்ணன் மாதிரியா இருப்பாங்க. எங்கிட்ட அஞ்சு பைசா கடன் வாங்கி ஆறு நாளாச்சு. இன்னும் திருப்பித் தரல்லே. கேட்டா அடிக்க வரான்'' என்று கீதா புகார் செய்தாள்.

''அப்படீன்னா என் பென்சிலைத் திருப்பிக் கொடு'' என்று கண்ணன் கத்தினான்.

கண்ணன் — கீதா சண்டை சூடுபிடிக்க ஆரம்பிப்பதற்குள் நல்ல வேளையாக ஜெயந்தி குறுக்கிட்டு, '' கோண்டு மக்களைப் பற்றி இன்னும் சொல்லுங்கப்பா'' என்றாள்.

''ஹிந்துக்களைப் போலவே இவர்களுக்கும் தீபாவளி, நவராத்திரி, ராம நவமி முதலிய பண்டிகைகள் உண்டு. பசுவைப் புனிதமாகக் கருதுகிறார்கள்.



பொதுவாக ஹிந்து மதத்தைச் சேர்ந்த கோண்டுக்கள் மது அருந்துவதில்லை. இவர்களுக்கு பைசாசூர் என்ற தெய்வம் உண்டு. இதற்கு பன்றியின் தலையைப் பலி கொடுக்கிறார்கள்.

''சரி. இவர்களுடைய தொழில் என்ன?'' என்றாள் கீதா.

''கோண்டு இனத்தவர்களில் பல பிரிவுகள் உண்டு. இதில் ராஜ் கோண்டு இனத்தவர்களுக்கு நிறைய நிலம் இருக்கிறது. இவர்கள் நாகரிகமானவர்கள். அதனால் குழந்தைகளையும் பள்ளிக்கு அனுப்புகிறார்கள். பன்றிகளை வளர்ப்பதில் இவர்களுக்கு விருப்பம் அதிகம். பன்றி மாமிசத்தை இவர்கள் ருசித்துப் புசிக்கின்றனர். சில பிரிவினர் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளனர். இவர்கள் பெரும்பாலும் காடுகளில் வசித்து, வேட்டையாடி ஜீவனம் செய்கிறார்கள். பேய், பிசாசுகளிடமும், பில்லி சூனியத்திலும் இவர்கள் ரொம்ப நம்பிக்கை வைத்திருக்கிறார்கள்.

''கோண்டு பெண்களைப் பற்றியும் சொல்லுங்கப்பா'' என்றாள் கீதா.

''நான் முதலில் சொன்ன மாதிரி, கோண்டு பெண்களுக்கு குழந்தைகள் மீது அபாரப் பிரியம் உண்டு. வேலை செய்யப் போனால் குழந்தைகளை முதுகில் கட்டி எடுத்துச் செல்வார்கள். கோண்டுவானா என்ற பகுதியின் அரசியாயிருந்த ராணி துர்க்காவதி என்பவர் போர் களத்தில் நிகழ்த்திய சாகஸத்தைச் சரித்திரம் கூறுகிறது. எல்லாப் பண்டிகை நாட்களிலும் கோண்டு பெண்களுடன் ஆண்களும் சேர்ந்து ஆடிப் பாடுகின்றனர்.

''அவர்கள் ஆடிப் பாடுவதை நேரில் பார்க்க முடியா விட்டாலும், சினிமாச் செய்தி படங்களிலேயாவது அந்த ஆட்டத்தைப் பார்க்கலாமில்லையா'' என்றாள் கீதா.

''அதற்கென்ன ஒரு நாள் போனாப் போச்சு'' என்று நான் நழுவினேன்.

தமிழாக்கம்: **வி.கோவிந்தசாமி**

மாய மோதிரம்

பாவை. டுமாமா



தன்னை வழிமறித்து நின்ற கம்பீர மான உருவத்தையும் அதன் கையில் உள்ள நீண்ட ஈட்டியையும் புன்முறுவ லோடு சில விநாடிகள் பார்த்துக் கொண்டு நின்றான் விஜயன். ''இந்த உருவத்திடம் எனக்கு ஒருவித பாசம் பக்தி, பரிவுதான் ஏற்படுகிறது. ஏன்? என்னை வழிமறிப்பவரிடம் வழக்கமாக வரும் கோபம் ஏனோ எனக்கு ஏற்பட வில்லை. ஏன்?... ஏன்..?'' என்று அவன் உள்ளம் கேட்டது. ஆனால் விடை கூறு பவர் யாருமில்லை.

மனம் குழம்பினாலும் செயல்படுவதில் சற்றும் தயங்கவில்லை அவன். தன்னைத் தடுத்து நிறுத்திய ஈட்டியைத் தகர்த்து விட்டு முன்னேற முடிவு செய்தான். விஜயனின் கையிலிருந்த வீர வாள் உயர்ந்தது. ஒரே வீச்சு! பளீர் என்று மின்னலைப் போல் இறங்கியது அது. அடுத்த விநாடி 'மளார்' என முறிந்து இரு துண்டாகியது அந்த ஈட்டி. இத்தனை நாட்கள் எத்தனையோ போர்களில் வெற்றி வாகை சூடிய ஈட்டி அது. பாரெல்லாம் தம் புகழ் பரவும் வகையில் பராக்கிரமர் ஆட்சி நடத்து வதற்கு உறுதுணையாக இருந்த ஈட்டி அது. இப்போது பரிதாபமாக இரு துண்டாகிக் கிடந்தது தரையிலே.

ஒரு விநாடி நிலை குலைந்து தான் போனார் பராக்கிரமர். தன் வேலை முறிக்கும் வல்லமை பெற்ற வாலிபனையே பார்த்துக் கொண்டு மௌனமாக நின்றார். தன் புகழ், பராக்கிரமம், வல் லமை ஆகியவை மங்குவதற்கான வேளை வந்து விட்டது என்பதையே இந்நிகழ்ச்சி சூசகமாக அறிவிப்ப தாகத் தோன்றியது அவருக்கு. 'இனி இவ்வுலகில் என் செல்வாக்குக்கு மதிப்பிருக்காது. பராக்கிரமரின் வீர சகாப்தம் முடிவுற்றது. அடுத்த வீர வாரிசு என் பேரன்தான் என்பதில் எனக்கு மகிழ்ச்சியே' இவ்வாறு தோல்வி யையும் மகிழ்ச்சியாக மாற்றிக் கொண்டு பராக்கிரமர் வாலிபனை நோக்கி, ''வாலிபனே! இனி இவ் வுலகம் உன் ஆக்கினைக்கு உட்பட்ட தாகி விட்டது. உன்னைத் தடுத்து நிறுத்தும் தகுதி இனி யாருக்குமே கிடையாது. நீ உன் வழியே போக லாம். தேடிப் போகும் பொருள் உனக்குக் கிடைக்கும்.'' என்று கூறி ஒதுங்கிக் கொண்டார்.

அவர் யார் என்பதை அவரிடமே கேட்டு அறிந்து கொள்ள நினைத்தான் விஜயன். ஆனால் அதற்குள் பராக்கிர மர் மாயமாக மறைந்து போனார். திகைத்தான் விஜயன். கண்டது கன வல்ல என்பதைத் துண்டாகிக் கிடந்த கூர் ஈட்டி மெய்ப்பித்துக் கொண்டிருந்தது. ஏமாற்றப் பெருமூச்சுடன் நின்றவனைக் கிளி வழி நடத்திக் கொண்டு போயிற்று. நெடுந்தூரப் பிரயாணத்துக்குப் பிறகு, ''அதோ, அதோ தெரிகிறது பார்'' என்றது கிளி.

4



விஜயன் அது பறந்து சென்ற திசையைப் பார்த்தான். திகுதிகுவென்று கொழுந்து விட்டு எரியும் தீயைக் கண்டான். ஆனால் அருகே பசுஞ் சோலையாக மரங்கள் அடர்ந்திருந்தன. 'இவ்வளவு பெரிதாக ஜ்வாலை வீசி எரிகிறதே. ஆனால் அருகில் எந்த மரமும் செடியும் வாடவில்லை, கருகிச் சருகாகவில்லையே' என்று வியந்தபடி இன்னும் அருகே போனான் விஜயன். கிளி தன் வேலை முடிந்து விட்டது என்றதாலோ என்னவோ பசுஞ் சோலையினூடே புகுந்து மறைந்தது.

பசேல் என்ற பசும் புல்வெளியின் நட்ட நடுவிலே வட்ட வடிவமாகத் தீ எரிந்து கொண்டிருந்தது. எப்படி, எதனால் எரிகிறது என்பது விந்தையாக இருந்தது. அந்த விந்தையான மாயத் தீயின் நட்ட நடுவே சற்றே உயர்ந்ததொரு மேடைமீது அழகே வடிவான ஒரு பெண் தூங்கிக் கொண்டிருந்ததைக் கண்டான் விஜயன். அவள் அருகே கேடயமும் வாளும் இருந்தன. விஜயனுக்கு விந்தையாக இருந்தது. வியப்பான வியப்பு! புவனாவைப் பற்றி ஏதும் அவனுக்குத் தெரியாதே. 'நெருப்பின் நடுவே இப்படி அமைதியாகத் தூங்குகிறாளே இந்த அழகி? தூங்குகிறாளா உயிருடன்தான் இருக்கிறாளா அல்லது...?' உண்மையை அறிந்து கொள்ள அவள் அருகே சென்றால்தான் சாத்தியமாகும் என்று தீவட்டத்தினுள்ளே நுழைவதற்குத் தயாரானான் விஜயன். 'கொழுந்து விட்டு எரியும் இந்தத் தீ என்னைச் சுடுமோ?' என்ற ஐயம் எழுந்தது அவனுக்கு. ஒரே தாவலில் தீ வளையத்தினுள்ளே குதித்துவிடுவதென்ற முடிவோடு தன்னைத் தயார்ப் படுத்திக் கொண்டான். ஆனால் பாவம், உரியவனை அந்தத் தீ ஒன்றும் செய்யாது என்ற உண்மை அவனுக்குத் தெரியாது. அந்த மாயத் தீ அவனைச் சுடவே இல்லை. வெற்று வெளியில் நடந்து போவது போல் அந்த நெருப்பு வளையத்தினுள் புகுந்து புவனா தூங்கும் மேடையருகே வந்தான். அவள் அழகு அவனைப் பிரமிப்பில் ஆழ்த்தியது. அவன் இதயத்தில் இனிமையை ஏற்றுவித்தது.

தடதடக்கும் நெஞ்சுடன் புவனாவின் அருகே சென்றான் விஜயன். புன்சிரிப்புத் தவழும் முகப் பொலிவைக் கண்டான். அவள் மேலாகக் குனிந்தான். பனிங்கு போன்ற அவளது விசாலமான செழுமையான நெற்றியிலே முத்தமிட்டான். அடுத்த விநாடி இமைகள் படபடக்கத் தன் விழிகளைத் திறந்து பார்த்தாள் விஜயனை. வியப்பும் வெட்கமுமாகத் தன் சந்தன உடலை அசைத்துப் பரபரப்புடன் எழுந்து உட்கார்ந்தாள். புவனாவின் மாயத் துயில் கலைந்தது. ''என்னை உறக்கத்திலிருந்து உயிர்ப்பித்த உங்கள் பெயரையும், நீங்கள் யார் என்பதையும் அறியலாமா?'' என்று கேட்டாள் புவனா, தனது தேனினுமினிய குரலால்.

பேச்சற்ற நிலையில் சிலையாகிப் போயிருந்த விஜயனைத் தன் நிலைக்குக் கொண்டு வந்தது புவனாவின் குரல். அவளது கருவண்டுக் கண்களின் சுழற்சியையும் கன்னங்களின் செம்மையையும் பார்த்துக் கொண்டே தன்னைப் பற்றிச் சுருக்கமாக விவரித்தான் விஜயன். பிறகு ''நீ யார், ஏன் இப்படித் தீ வட்டத்தின் நடுவே தூங்கிக் கொண்டிருந்தாய் என்பதை நான் தெரிந்து கொள்ளலாமா?'' என்று புவனாவிடம் கேட்டான்.

விஜயனின் அகன்ற தோள்களையும் அழகும் ஆண்மையும் கலந்த கம்பீரமான உருவையும் பார்த்து மகிழ்ந்த புவனா தன்னைப் பற்றி அதிகம் கூறவில்லை. ''நான் ஒரு கந்தர்வ கன்னி. ஒரு சாபத்தினால் இப்படி மாயத் துயிலில் மயங்கிக் கிடந்தேன். என் துயில் கலைப்பவரே என் கணவராக வேண்டும், அவர் வல்லவராகவும் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். என் விருப்பம் நிறைவேறிச் சாப விமோசனமும் பெற்றிருக்கிறேன். என் பெயர் புவனா'' என்றாள் இதற்குள் அவளைச் சூழ்ந்து எரிந்து கொண்டிருந்த நெருப்பு மறைந்து விட்டது.

மகிழ்ச்சியினால் துள்ளிக் கொண்டிருந்த விஜயனின் உள்ளம் துவண்டு சாம்பியது. தலை கவிழ்ந்தான். ''ஏன், என்ன கவலை? என்ன யோசனை?'' என்று கேட்டாள் புவனா.

''நீ கந்தர்வப் பெண்ணானால் மானிடனாகிய நான் உன்னை என்னுடையவளாக்கிக்கொள்ள முடியாதே'' என்றான் விஜயன்.

தெள்ளிய நீரோடையின் இனிய சலசலப்பைப் போல் கலகலவென்று சிரித்தாள் கன்னி. ''என் துயில் கலைப்பவனே எனக்குக் கணவனாகவேண்டும் என்று வரம் கேட்டிருக்கிறேன். அதுவும் தவிர நான் பூவுலகில் மனித மகளாக வாழ விரும்பியே இங்கு வந்தவள். ஆகவே நீங்கள் வேதனைப்படவேண்டாம்'' என்றாள் புவனா.

''நீ வெறும் புவனா இல்லை; புவன மோகினி'' என்றவாறு அவள் தளிர்க் கரங்களைப் பற்றித் தூக்கினான். புதிய காதலர்களின் இன்பத்திலே பங்கு கொண்ட கானகத்து மரங்களிலுள்ள மொக்குகள் அவிழ்ந்து மணம் பரப்பி மலர்ந்தன. பறவைகள் கானமிசைத்து மகிழ்ந்தன.

சீதளன் ஆட்சி புரிந்த அந்த மலைக் குகைக்குப் புவனாவுடன் வந்தான் விஜயன். அந்தப் பரந்து அடர்ந்த கானகத்தில் பாதுகாப்பானதும் வசதியானதுமான இடம் அந்தக் குகைதானே. சீதளனின் உடல் நீராக மாறி ஓடி ஆவியாக மறைந்து விட்டிருந்தது. குகைக்கு வந்ததும் புவனாவின் தங்கக் கரத்தை எடுத்து அவளது மென் விரல்களிலே தன்னிடமிருந்த ஸ்வர்ண நதியின் சொக்கத் தங்கத்தினால் உருவாக்கிய மோதிரத்தை அணிவித்தான். ''புவன மோகினி! நீ என் வாழ்க்கைத் துணைவியாவதற்கு அடையாளமாக இதை அணிவிக்கிறேன். இது ஓர் அபூர்வமான தங்கத்தினால் உருவாகியதாம். அந்தத் தங்கத்தை ஏதோ சாபம் தொடர்ந்து வருகிறதாம். யாரோ கூறினார்கள். ஆனால் கந்தர்வக் கன்னியாகிய உன்னையும் உன் காதலனாகிய என்னையும் அந்தச் சாபம் ஏதும் செய்யாமல் வாழ்த்தி வரம் கொடுக்கும் என்றே நம்புகிறேன்'' என்று கூறி அன்புடன் அவள் கைகளைப் பற்றினான்.

''நீங்கள் எனக்கு அளித்த பரிசைப் போலவே நானும் உங்களுக்கு ஒரு பரிசு தரப் போகிறேன். நீலவேணி என்றொரு குதிரை. சாதாரணக் குதிரையல்ல. பறக்கும் வல்லமை வாய்ந்த குதிரை. என் குதிரை நீலவேணியை உங்களுக்கு அளிக்கிறேன். மானிடர்களை ஏற்றிக் கொண்டு அது வானத்திலே பறக்காதுதான். ஆனாலும் பூமியிலே அதன் வேகத்துக்கும் வல்லமைக்கும் ஈடான குதிரைகளைக் காண முடியாது. உங்கள் வீர வாழ்வுக்கு ஏற்ற வாகனம் அது'' என்றாள் புவனா. சொல்லி வாய் மூடு முன் அவர்கள் முன்னே வெல்வெட்டு உடலும் வெண்பட்டுப் பிடரியும் சிலிர்க்கக் கனைத்தபடி கம்பீரமாகத் தோன்றியது நீலவேணி. முன்னங் கால்களால் தரையைக் கிளறித் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்தது. மினுமினுக்கும் அதன் உடலைத் தட்டித் தடவிக் கொடுத்தான் விஜயன். குதிரையும் கனைத்துத் தான் அவனை ஏற்றுக் கொண்டதாகத் தெரிவித்தது. தாவி ஏறி அதன் மீது அமர்ந்து கொண்டான் விஜயன். தன் முன்னங் கால்களைத் தூக்கிக் கம்பீரமாக நின்று புவனாவைப் பார்த்துக் கனைத்தது நீலவேணி. ''என்னைப் போலவே எண்ணி இவருக்கும் நீ உழைக்க வேண்டும்'' என்று ஆணையிட்டாள் புவனா.

நல்ல தீக்குச்சி

புத்திசாலி ஒருவன் தீக்குச்சியை உரசி சிகரெட்டைப் பற்றவைக்க முயன்றான். ஒரு குச்சியை உரசினான். அது பற்றவே இல்லை. அதைக் கீழே போட்டுவிட்டு மற்றொரு குச்சியை உரசினான். அதுவும் பற்றவே இல்லை. அதையும் கீழே போட்டுவிட்டு மூன்றாவதாக ஒரு குச்சியை எடுத்து உரசினான். அது எரிந்தது. உடனே சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டான். அந்தத் தீக்குச்சியை ஊதி அணைத்தான். கீழே போடாமல் அதைச் சட்டைப் பையிலேயே போட்டுக்கொண்டான்.



''அதை ஏன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டாய்?'' என்று ஒருவன் கேட்டான்.

''இது ஒன்றுதான் நல்ல தீக்குச்சியாக இருக்கிறது. மீண்டும் உபயோகித்துக் கொள்ளலாமே'', என்றான் மூடன்.

அமெரிக்கக் குட்டிக்கதை — ''கோகு''



பூமி அதிரத் தன் கால்களைப் பதித்துக் கானகத்தினுள்ளே காற்றெனப் புகுந்து ஓடியது நீலவேணிக் குதிரை. குதிரை சவாரி விஜயனுக்குப் புதிய அனுபவம். ஆனாலும் வீரனாகையால் அதன் வேகத்தைக் கண்டு மலைத்தாலும் பயந்து விடவில்லை. வழுவழுப்பான அதன் கழுத்தைக் கட்டிக் கொண்டான், கீழே விழாதிருக்க. அதுவும் கொஞ்ச நேரத்துக்குத்தான். விரைவிலேயே அதன் முதுகில் லாகவமாக அமர்ந்து சவாரி செய்யும் திறமையைப் பெற்றுவிட்டான். புதிய எஜமானனுக்குத் தன் வல்லமையைக் காட்டிவிட்டுத் திரும்பி வந்தது நீலவேணி புவனாவிடம்.

தன் கணவனாகப் போகும் விஜயனின் கம்பீரத்தையும் நீலவேணியின் மீது அவன் அமர்ந்து வரும் அழகையும் கண்டு மகிழ்ந்து போனாள் புவனா. ''நீங்கள் வீர பரம்பரையில் தோன்றியவர். சாகஸங்கள் பல புரிய வேண்டியவர் நீங்கள். இப்படிக் கானகத்திலே சுற்றிக் கொண்டிருப்பது பாலைவனத்திலே பொழியும் மழையைப் போலப் பலனற்றதாகிப் போகும். நீலவேணியுடன் தேச சஞ்சாரம் கிளம்புங்கள். உங்கள் வீரத்தையும் வல்லமையையும் கண்டால் எவ்வளவோ மன்னர்கள் வரவேற்று வாழ்வளிக்கத் தயாராக இருப்பார்கள். திறமையினாலும் வீரத்தினாலும் உயர்ந்து உன்னதமான செயலுடன் திரும்பி வாருங்கள். அதுவரை நான் இந்தக் குகையிலேயே உங்களுக்காக உங்கள் வரவை எதிர்பார்த்துக் காத்திருப்பேன். மகிமையோடு வரும் உங்களை என் மணாளனாக ஏற்றுக் கொண்டு மகிழுவேன். திக்விஜயம் செய்து வெற்றி வீரராக, வீர விஜயனாகத் திரும்புங்கள்'' என்றாள் புவனா.

புவனாவைப் பிரிந்து செல்வது அவனுக்குக் கஷ்டமாக இருந்தாலும் அவள் விருப்பத்துக்கு மாறாகக் கானகவாசியாகவே இருப்பதை அவன் விரும்பவில்லை. புவனாவின் ஆசையை நிறைவேற்றத் தேச சஞ்சாரத்துக்குக் கிளம்பினான் விஜயன்.

''உங்கள் நினைவாகவே உங்கள் வரவை எதிர்பார்த்துக் காத்திருப்பேன்'' என்று கண்ணீர் மல்கக் காதலனுக்கு விடை கொடுத்தாள் புவனா. புவனாவின் நினைவாகவே, அவளோடு வாழப் போகும் இன்ப வாழ்வின் கனவாகவே பிரயாணம் செய்யலானான் விஜயன். நான்கு கால்களையும் கம்பீரமாக ஊன்றிக் 'கடகடக் கடக்... கடகடக் கடக்...' என்று சீரான தாள கதியை எழுப்பியபடி நீலவேணி போய்க் கொண்டிருந்தது.

(தொடரும்)



தெரியுமா ?

சரோஜினி நாயுடு



2167. நேபா நகர் எங்குள்ளது. எதற்குப் பெயர் பெற்றது?

2168. எல்லாப் பருவ நிலைக்கும் ஏற்ற துறைமுகம் பாரதத்தில் இருக்கிறதா ?

2169. இந்திய தேசிய காங்கிரஸின் முதல் தலைவர் யார் தெரியுமா?

2170. கிரேனடா (Grenada) என்பது எந்தக் கடலில் உள்ள தீவு நாடு ?

2171. லாரன்கோ மார்க்விஸ் (Laurenco Marques) என்பது எந்த நாட்டின் தலைநகர் ?

2172. அமீர்குஸ்ரு என்பவர் புகழ் பெற்ற பாரசீகக் கவி. இவர் எந்த மொகலாயப் பேரரசரின் அவைப் புலவராக இருந்தார் ?

2173. சிந்து நதிப் பகுதியில் முதன் முதலில் அராபியர்கள் நுழைந்த ஆண்டு கி. பி. 647, 712, 820, 1018, 1026—இதில் எது சரி ?

2174. இந்திய சரித்திரத்தில் ஒரு முக்கியமான நிகழ்ச்சி கி. பி. 1565ல் நிகழ்ந்தது. அது என்ன என்று கூற முடியுமா ?

2175. மொகலாயப் பேரரசு இந்தியாவில் ஸ்தாபிதமான ஆண்டு கீழ்க்கண்டவைகளில் எது ? கி.பி. 712, 1206, 1526, 1556.

2176. நோபல் பரிசு பெற்ற முதல் இந்தியர் யார் ?

2177. கவர்னர் பதவி வகித்த முதல் இந்தியப் பெண் மணி யார் ?

2178. ஹர்ஷவர்த்தனர் எந்த நூற்றாண்டில் பாரதத்தில் அரசாண்டார் ?

2179. சந்திரனில் முதன் முதலில் மனிதன் நடந்து ஒரு வாகனத்தையும் ஓட்டிச் சென்றானல்லவா ? அதன் சங்கேதப் (code) பெயர் என்ன ?

2180. விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தின் (Space Research Organisation) தலைவர் – டாக்டர் எஸ். தவான், டாக்டர் ஹெச். என். சேத்னு, டாக்டர் ராஜா ராமண்ணு இவர்களில் யார் ?

2181. அணு ஆயுதங்களின் சோதனையையும் உற்பத்தியையும் நிறுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுவதற்காகக் காலஞ்சென்ற அமெரிக்க ஜனதிபதி கென்னடியைக் காணச் சென்றார் புகழ்பெற்ற ஓர் அரசியல் மேதை. அவர் அயல்நாடுகளுக்குச் சென்றது அதுவே முதல் தடவையும்கூட. அவர் யார் தெரியுமா ?

2182. பூமிக்குள் நாம் சமீபத்தில் அணுகுண்டை வெடிக்கச் செய்து ஆராய்ந்தோம் இல்லையா ? இப்படி முதன் முதலில் பூமிக்குள் அணுசக்தியை வெடிக்கச் செய்து ஆராய்ந்த நாடு எது ?

2183. ஊசிகள் மூலம் நோய்களைக் குணப்படுத்தும் சீன முறைக்கு என்ன பெயர் ?

2184. பாரதத்தின் சாஸ்திரீய நடனங்களின் புகழ் மேலை நாடுகளில் பரவுவதற்குக் காரணமாக இருந்தவர் யார் ?

2185. அமெரிக்க ஜனதிபதி கென்னடியைத் திரு ராஜாஜி அவர்கள் சந்தித்தது எந்த ஆண்டில் ? எதற்காக ?

தெரியுமே !

ராஜாஜி



2167. மத்தியப் பிரதேசத்தில் உள்ளது. பத்திரிகைக் காகிதங்கள் பழுப்பு நிறத்தில் வருகின்றனதல்லவா? நேபா பேப்பர் என்ற அது இங்குள்ள அரசாங்கக் காகிதத் தொழிற்சாலையில் தயாராவதுதான். 2168. ஒரிஸ்ஸாவில் உள்ள கட்டக்கில் இருக்கும் பாரதீப் துறைமுகம். 2169. உமேஷ் சந்திர பானர்ஜி. 1885ல் கூடியது. 2170. மேற்கிந்தியத் (வெஸ்ட்-இந்தீஸ்) கடலில். 2171. மொஸாம்பிக்கின் தலைநகர். 2172. அலாவுதீன் கில்ஜியின் அவையில். 2173. இந்தியாவின் சிந்துநதிப் பகுதியில் அராபியர் படையெடுத்தது கி.பி. 712ல். 2174. தலைக்கோட்டைப் போர். 2175. மொகலாய சாம்ராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டது கி. பி. 1526ல். 2176. ரவீந்திர நாத் டாகூர். 2177. ஸ்ரீமதி சரோஜினி நாயுடு. 2178. ஏழாம் நூற்றாண்டில். 2179. ரோவர்-I. 2180. டாக்டர் எஸ். தவான். 2181. ராஜாஜி அவர்கள். 2182. பிரிட்டன். 2183. நம்பிங் (Numbing) அக்குபங்சர் இல்லை. அக்குபங்சர் என்பது அனால்ஜேஸியாவுக்கும் பதிலாகப் பயன்படுத்தும் முறை. 2184. உதயசங்கர். 2185. அணு சோதனைகளைத் தடை செய்யக் கோரி ஜான் எஃப். கென்னடியை ராஜாஜி 1962ம் ஆண்டு அக்டோபரில் சந்தித்தார்.

கோகுலத்தில் வெளியாகும் கதைகளில் காணப்படும் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே ● சென்னை, சேத்துப்பட்டு 'கல்கி' அச்சகத்தில், பாரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்துக்காக வி. வைத்தியநாதன் அச்சிட்டு வி. முரளிதரன் வெளியிட்டது ● ஆசிரியர்: ரே. ஆர். ஆத்மநாதன்.


படிப்படியாக உயர்ந்து
முன்னேற்றமடைந்த ஆளுக்குத் தெரியும்..
...அழகான ஆடைகளும் அதற்கு உதவின என்று!
MAFATLAL GROUP

-M. 458 TM

REGISTERED No. M 9040

GOKULAM Childrens Fortnightly



